பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 25 செவ்வாய்க்கிழமை (07.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :72

# ஜெனீவாப் பேச்சு 22, 23 இல்!

## லண்டனில் சொல்ஹெய்ம் - பாலா நேற்றைய சந்திப்பை அடுத்து முடிவு

லண்டன், பெப்ரவரி 7

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஜெனீவாப் பேச்சுகள் எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் நடைபெறும்.**

**நேற்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கும், நோர்வே அனுசரணைத் தரப்பின் விசேட பிரதிநிதியும் அந்த நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் லண்டனில் நடைபெற்ற பேச்சுகளை அடுத்து இந்த முடிவு எட்டப்பட்ட**

பேச்சுக்கான திகதி குறித்து ஏற்கனவே இலங்கை அரசுத் தரப்புடன் பேச்சு நடத்தியுள்ள எரிக் சொல்ஹெய்ம், நேற்று பாலசிங்கத்துடன் நடத்திய சந்திப்பை அடுத்து முதல் சுற்றுப் பேச்சுக்கான திகதியை இறுதி செய்தார்.

அது பற்றிய தகவலைத் தெரிவிக்கும் உத்தியோகபூர்வ அறிவிப்பை நோர்வே நேற்றிரவு வெளியிட்டது.

நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்முக்கும் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையிலான நேற்றைய [illegible] சுமார் இரண்டு மணிநேரம் அன்ரன் பாலசிங்கத்தின் லண்டன் இல்லத்தில் நடைபெற்றது.

இப்பேச்சுகளில் மதியுரைஞர் பாலசிங்கத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ பொபி காலமானார்

ரெலோ அமைப்பின் முன்னாள் முக்கிய உறுப்பினரான பொபி என்பவர் இந்தியாவின் தமிழகத்தில் காலமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் நல்லூரைச்சேர்ந்த பொபி, ரெலோ அமைப்பின் ஆரம்பகால உறுப்பினராவார். 80 களில் ரெலோவினால் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதலான சாவகச்சேரி பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலிலும் இவர் முக்கிய பங்காற்றியிருந்தார்.

80களின் நடுப்பகுதியில் ரெலோவின் உள்முரண்பாடுகளின்போது ரெலோவின் இராணுவப் பிரிவுத்தலைவரான தாஸையும் அவரது குழுவினர் சிலரையும் யாழ். வைத்தியசாலைப்பகுதியில் வைத்துப்பொபி குழுவினர் சுட்டுக்கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. நீண்டகாலமாக அவர் அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தார், அண்மையில் அவர் இயற்கை மரணம் அடைந்தார். (க)

## பேச்சுவார்த்தைகள் கடுமையாக இருக்கும்

### சொல்ஹெய்மின் கருத்து இது

ஒஸ்லோ,பெப்.7

ஜெனீவாப்பேச்சுகள் கடுமையாக (ToughBP) இருக்கும் என்கிறார் நோர்வே அனுசரணைக் குழுவின் பொறுப்பாளரும் அந்நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம்.

உத்தேச ஜெனீவாப் பேச்சுகள் தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் நேற்று எரிக் சொல்ஹெய்ம் - அன்ரன் பாலசிங்கம் சந்திப்பையடுத்து இந்த அறிக்கை வெளிவந்துள்ளது.

இந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு: -

(14ஆம் பக்கம் பார்க்க)

### சமஷ்டி முறைதான் உகந்தது என்றாலும்

## இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு இதுதான் என அமெ. வலியுறுத்தாது

கொழும்பு, பெப்.7

''இலங்கையில் தேசியப் பிரச்சினையை இலங்கை இவ்வாறுதான் தீர்க்க வேண்டும்- இந்த முறையைக் கொண்டுதான் தீர்க்க வேண்டும்.- என்று இலங்கைக்கு அழுத்தங் களைக் கொடுக்கவோ அல்லது கட்டளையிடவோ அமெரிக்கா என்றைக்கும் முயலாது. அதற்கான அதிகாரம் அமெரிக்காவிடம் இல்லை.

''மாறாக, இலங்கையில் நிரந்தர சமாதானம் மலர்ந்து அனைவரும் சந்தோசமாக வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே அமெரிக்கா இலங்கைப் பிரச்சினையில் தலையிடுகிறது. முழு ஒத்துழைப்பையும் வழங்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனு விண்ணப்பங்களைப் பெற பாதுகாப்புடன் வந்த ஈ.பி.டி.பியினர்

யாழ்ப்பாணம்,பெப்.7

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பல்வேறு கட்சிகளும் தயாராகிவரும் நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் விண்ணப்பங்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) பெற்றுக்கொண்டுள்ளது.

நேற்றுக்காலை யாழ்.செயலகத்தில் உள்ள தேர்தல் திணைக்களத்துக்கு பலத்த இராணுவப் பாதுகாப்புடன் வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்யும் விண்ணப்பங்களைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் இம்மாதம் 15ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணத்தைச் செலுத்தலாம்.

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை இந்தவேளையில் நடத்த வேண்டாம் என தமிழரசுக் கட்சி சார்பில் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 22 ஈழ அகதிகள் நேற்றுத் தமிழகத்துக்கு

தனுஷ்கோடி, பெப்.7

இலங்கையிலிருந்து 22 பேர் அகதிகளாக நேற்று தனுஷ்கோடி பகுதியை வந்தடைந்தனர்.

இலங்கையில் போர் அபாயம் நீங்கி வருகின்ற நிலைமையிலும் கூட தினமும் அகதிகள் தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் நேற்று இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் படகு மூலம் தனுஷ்கோடியை வந்தடைந்தனர். கடந்த ஓரிரு மாதங்களில் மாத்திரம் சுமார் 300 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கூட்டுப் பற்றிய பேச்சு தெற்கில் மும்முரம்

கொழும்பு, பெப்.7

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் மலையகத் தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்திக்கொள்வது குறித்து மும்முரமாகப் பேசப்பட்டபோதும் அவற்றுள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் உருவாகியிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்தோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியு

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் தாக்குதல் குறித்து மக்களிடம் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.7

குடாநாட்டில் படையினரால் பொதுமக் கள் தாக்கப்பட்டனர் என்றும், உடைமைகள் சேதமாக்கப்பட்டன என்றும் கூறப்படும் சம் பவங்கள் குறித்து இராணுவப் பொலீஸார் நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர்.

சமீபகாலமாக நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையில் படையினர் தம்மைத் தாக்கினர் என்றும், உடைமைகளைச் சேதமாக்கினர் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ். அலுவலகத்தில் பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பதிவுசெய்திருந்தனர். அவற்றின் அடிப்படையில் விரிவான அறிக்கை யொன்றைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் இளைஞர் கடத்தல்

வாழைச்சேனை, பெப்.7

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கடத்தப்பட்டவர் 22 வயதுடையவரெனத் தெரிவிக்கப்படுகிறது. தனது வீட்டில் இருந்தவேளை இரவு 9.15 மணியளவில் மேற்படி இளைஞர் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுள்ளார் என

(14ஆம் பக்கம் பார்க்க)

### சமூக சேவையாளர்கள் கடத்தலைக் கண்டித்து

## மட்டு. மாவட்டத்தில் நேற்று பூரண ஹர்த்தால்

பட்டிருப்பு, பெப்.7

தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக சேவையாளர்கள் கடத்தப்பட்டமையைக் கண்டித்தும், அவர்களை விடுவிக்கக் கோரியும் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு நகர் உட்பட்ட பிரதேசங்களில் பாடசாலைகள், அரசாங்க திணைக்களங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டிருந்தன. போக்குவரத்து காலையில் இடம்பெற்றபோதிலும், நண்பகலுடன் அதுவும் ஸ்தம்பிதமடைந்தது.

நகரின் மத்தியில் ஆங்காங்கே 'ரயர்கள்' போடப்பட்டு எரியூட்டப்பட்டிருந்தன.

### தாக்குதல்கள், அச்சுறுத்தல்களை ஆட்சேபித்து

## திருமலைத் தமிழ் வர்த்தகர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

திருமலை, பெப்.7

திருகோணமலையில் தமிழ் வர்த்தகர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருமலை நகர தமிழ் வர்த்தகர்கள் திருமலை பொலீஸ் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று நடத்தினர்.

அதேசமயம், நேற்றைய தினம் நகரத்தின் அனைத்துக் கடைகளும் இழுத்து மூடப்பட்டன. தமது பாதுகாப்பிற்கு படைத் தரப்பினர் உத்தரவாதம் தரும்வரை கடைகளைத் திறக்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய நாட்டின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களும், சூடு மிதிக்கும் இயந்திரங்களும் மாவட்ட கமநல சேவைத் திணைக் களங்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று கமநல சேவைத் திணைக்கள வளாகத்தில் இடம்பெற்றது. இதில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் மக்சிமோ மரபாட்டோ மங்கள விளக்கேற்றுவதனையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கமநல சேவைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கே.சுந்தரேசன் ஆகியோர் உரையாற்றுவதையும் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட முகாமையாளர் மேலதிக அரச அதிபர் ஆகியோர் சம்மேளன உறுப்பினர்களிடம் விவசாய இயந்திரங்களைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- பிரியன்)*

# யாழ். விவசாய சம்மேளனங்களுக்கு விவசாய இயந்திரங்கள் கையளிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.7

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்டக் கமநல சேவைத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 13 விவசாய சம்மேளனங்களுக்கு நெல் அறுவடைசெய்யும் இயந்திரங்கள் சூடடிக்கும் இயந்திரங்கள் ஆகியவை வழங்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மாவட்ட கமநலசேவைத் திணைக்களத்தில் நடைபெற்றது.

மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினர்களாக ஐ.நா. அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் மக்ஸிமோ மரபாட்டோ, அலுவலக முதன்மை அதிகாரி அ.கமலானந்தசர்மா, விவசாயத்திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் ஜெயநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து மாலை அணிவிக்கப்பட்டு, விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

தொடர்ந்து வரவேற்புரையை தலைமைப் பீட பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் நிகழ்த்தினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன். பின்னர் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளிடம் நெல் அறுவடை இயந்திரமும், சூடடிக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டன. தொடர்ந்து இயந்திரங்களின் தொழிற்பாடு பற்றிய செயன்முறை விளக்கம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் கமநல சேவைத் திணைக்கள ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-12-14)

## வீதிவிபத்தில் அதிபர் காயம்!

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த பாடசாலை அதிபர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பெரிய மாவடியைச் சேர்ந்தவரும் வரணி மகாவித்தியாலய அதிபருமான செல்லத்துரை சுப்பிரமணியம் (வயது-58) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.(ஒ-117)

## கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பணியாளர் ஒருவரைக் காணவில்லை

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் பணியாளர் ஒருவரை கடந்த இரண்டு நாள்களாகக் காணவில்லையெனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவற்குழி தெற்கு கைதடியைச் சேர்ந்த 23 வயதுடைய குணரத்தினம் - சுரேஷ் என்பவரே காணாமற்போனவராவார்.

கடந்த சனிக்கிழமை மாலை வீட்டில் இருந்து நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் செல்வதாகக் கூறிச் சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

இவர் எந்த நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்பது முறைப்பாட்டில் தெரிவிக்கப்படவில்லை.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி றோகித பிரியதர்சன மேற்கொண்டு வருகின்றார். (த-7)

## மனித உரிமைக் குழுவுக்கு சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறைக்கான புதிய அனுமதியில் முறைகேடுகள் இடம்பெற்றதாக தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்ட மாணவர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## வெயிலில் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர், மாணவருக்குச் சிரமம்

அச்சுவேலி,பெப்.7

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகளை வழங்குவதில் பாடசாலைக்கு பாடசாலை மாறுபட்ட விதத்திலான நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன என்று ஆசிரியர்கள், மாணவர்களிடையே கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலான பாடசாலைகளில் பாடசாலை நேரத்திலேயே குறிப்பிட்டளவு நேரம் விளையாட்டுப் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டு பயிற்சிகள் காலையிலேயே வழங்கப்படுகின்றன. ஆனால், சில பாடசாலைகளில் பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னர் பிற்பகல் வெயிலில் வைத்து பயிற்சி வழங்கப்படுவதாகவும் -

இதனால், மாணவர்களும், ஆசிரியர்களும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் பாடசாலை நேரத்திற்கு புறம்பாக பிற்பகலில் விளையாட்டுப் பயிற்சி வழங்குவது ஏற்புடையது அல்ல எனவும் -

சகல பாடசாலைகளிலும் ஒரே விதமான நடைமுறையை பின்பற்ற ஆவன செய்யப்படவிருப்பதாகவும் - ஆசிரியர் தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-11)

## கண்ணிவெடி அகற்றும் நிறுவன அலுவலகத்தில் கொள்ளை

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் சாவகச்சேரி அலுவலகத்தில் இனம்தெரியாதவர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துள்ளனர்.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் டெனிஷ் நிறுவனத்தின் அலுவலகம் அமைந்துள்ளது.

கடந்த நான்காம் திகதி சனிக்கிழமை இரவு சுமார் எட்டு மணியளவில் கறுப்புத் துணியால் முகத்தை மறைத்தவாறு வந்தவர்கள் அங்கிருந்த காவலாளியை மிரட்டி விட்டு அலுவலகத்திற்குள் நுழைந்தனர் என்றும் -

அலுவலகத்தில் இருந்த மின்பிறப்பாக்கிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள், தொலைக் காட்சிப் பெட்டி உட்படப் பெறுமதிமிக்க பொருள்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்றும் - கூறப்பட்டது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்தில் நிறுவனத்தினர் முறையிட்டுள்ளனர் என்று யாழ்.பொலீஸ் நிலையப் பதில் பொலீஸ் பொறுப்பதிகாரி கே.ஜவ்வர் தெரிவித்தார். (ஒ-7)

## கல்வி நிர்வாகசேவை பரீட்சார்த்திகள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,பெப்.7

எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் 0112785230 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (எ-204)

## வாத்திய இசைப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.7

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் வாத்திய இசைப் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், ஓகன், கிற்றார் ஆகிய வகுப்புகளே இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் - பயிற்சி வகுப்புத் தொடர்பான விவரங்களை பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பிரதேச செயலர் சீ.ஏ.மேகன்றாஸ் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க[illegible] கப்பட்டுள்ளது.

## பரபரப்பான துரத்தலில் பாகிஸ்தான் இந்தியாவை வீழ்த்தி வெற்றிவாகை!

பெஷாவர், பெப்.7

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் நேற்று நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வெளிச்சமின்மையால் முன்னதாகவே ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த போதும் டக்வோர்த் லூயிஸ் முறையில் இந்திய அணியை 7 ஓட்டங்களால் வீழ்த்தியது பாகிஸ்தான் அணி.

பாகிஸ்தான் - இந்தியா அணிகளிடையிலான ஒருநாள் தொடர் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் களத்தடுப்பில் ஈடுபட்டது. கடைசி ஓவரில் 328 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது இந்தியா.

மிகப் பெரிய இலக்கைத் துரத்தும் தனது போராட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு சல்மான் பட், சொய்ப் மலிக் ஆகியோர் பலமான அடித்தளம் இட்டனர். இருவரும் 151 ஓட்டங்களை 2ஆவது விக்கெட் இணைப்பாட்டமாகக் குவித்தனர். 67 பந்துகளில் 90 ஓட்டங்களை அவர்கள் விளாசியதும் அதில் உள்ளடக்கம்.

ஆனாலும், பாகிஸ்தான் இன்னிங்ஸின் இடையில் அதன் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளிகளில் சரிந்தன. களத்தடுப்பாளர் சுரேஷ் ரெய்னா 'மிட் விக்கெட்' திசையில் இருந்து நேராக - நேர்த்தியாக - விக்கெட் நோக்கி எறிந்த பந்தை எட்டித் தனது துடுப்பால் மறித்த குற்றத்திற்காக அணித் தலைவர் இன்ஸமாம் ஆடுகளத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் இவ்வாறு வெளியேற்றப்பட்ட மூன்றாவது ஆட்டக்காரர் இவர். இதற்கு முன்னர் இந்தியாவின் மொஹிந்தர் அமர்நாத், பாகிஸ்தானின் ரமீஸ் ராஜா ஆகிய இருவர் மட்டுமே இவ்வாறு ஆடுகளத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் இன்னிங்ஸ் நிறைவடைய மூன்று ஓவர்கள் மீதமிருக்கையில் இருட்டிக் கொண்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. டக்வோர்த் லூயிஸ் முறையில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணி வீரர் சல்மான் பட் தெரிவு செய்யப்பட்டார்.(ம-ரி)

## 14,000 ஓட்டங்கள்; சச்சின் புதிய சாதனை



இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் இடையே பெஷாவர் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது 39 ஆவது சதத்தை பூர்த்திசெய்தார். அத்துடன், ஒரு நாள் ஆட்டங்களில் 14 ஆயிரம் ஓட்டங்களை கடந்து புதிய உலக சாதனையைப் படைத்தார்.

டெனிஸ் எல்போ பிரச்சினையிலிருந்து அணிக்கு மீண்டு வந்ததன் பின்னர் சச்சின் டெண்டுல்கர் அண்மைக்காலமாக சிறப்பாக தனது திறனை வெளிப்படுத்தவில்லை. இதனால் அவர் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாக வேண்டியிருந்தது. நேற்று 113 பந்துகளை எதிர்கொண்டு 100 ஓட்டங்களைப் பெற்றார் சச்சின்.

இதன் மூலம் ஒருநாள் ஆட்டங்களில் 14 ஆயிரம் ஓட்டங்களை எட்டிப்பிடித்த முதல் வீரர் [illegible]யை அவர் படைத்தார். நேற்று 91 ஓட்டங்களைப் பெற்றபோது அவர் இந்தச் சாதனை மைல் கல்லைக் கடந்தார். (ம-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர்-முஸ்லிம் சமரசம்

சுமார் மூன்றரை மாதங்களின் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரமுகர்களுக்கும் இடையிலான சமரச சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. அம்பாறை மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கையை ஸ்திரப்படுத்தி இரு தரப்பு உறவை வலுவாக்கவும் இந்தச் சந்திப்பில் உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் முக்கியமான ஒரு விடயம் இடம்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

*"இரு சமூகங்களுக்கும் இடையில் (தமிழர்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில்) குறிப்பிட்ட சிலர் முரண்பாட்டாளர்களாகத் தொழில்படுவதை இனங்கண்டு அவர்களை சமூகங்களில் இருந்து புறந்தள்ளும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்."* - என்பதும் இந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டதாகக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கிழக்கில் - தென் தமிழீழத்தில் - தமிழர்களும், முஸ்லிம்களும் வாழ்வியலுக்கான பூகோளப் பிரதேச விடயத்தில் ஒன்றுபட்டு சீவிப்பவர்கள். அங்கு அவர்களின் பாரம்பரியத் தாயகப் பிரதேசத்தை நோக்குபவர்கள் 'பிட்டும் தேங்காய்ப் பூவும் போல' அவர்கள் கலந்திருப்பதை உணர்வர்.

அது மாத்திரமல்ல. அவர்கள் தாங்கள் பின்பற்றும் மார்க்கத்தினால் வேறுபட்டவர்களானாலும் பேசும் மொழியில் ஒன்றுபட்டவர்கள். இலங்கையில் மொழி அடிப்படையில் எழுந்த இந்த இனப்பிரச்சினையில் தமிழ் இனம் சிறுபான்மையினராக அடக்கப்பட, பௌத்த, சிங்களப் பேரினம் பெரும்பான்மையினராகி அடக்குகின்றது.

அத்தகைய மேலாண்மைப் போக்குடைய பேரினவாதிகள் தமது அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டும் சிறுபான்மையினரை பலவீனப்படுத்துவதற்காக, அவர்களை (சிறுபான்மையினரை) மேலும் பல சிறுபான்மை இனங்களாக உடைத்து, அவற்றின் பலத்தைக் குன்றச் செய்யும் சதித் திட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்தச் சதித் திட்டத்தில் பலிக்கடாவான தமிழ் பேசும் சமூகம், 'தமிழ் இனம்' என்றும், 'முஸ்லிம் இனம்' என்றும் கூறுபோட்டு - கூறுகெட்டு - அவலப்படும் நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரிவை மேலும் மும்முரமடையச் செய்யும் கபடவேலையை இரண்டு தரப்பிலும் சில தீய சக்திகள் முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றன.

கிழக்கில் கருணா குழு என்ற வெளிப்பெயரை முன்நிறுத்திச் செயற்படும் ஒட்டுப்படைகள் தமிழர் தரப்பிலும் -

அரசுப் பதவிகளுக்காகக் குத்துக்கரணம் அடித்த சில அரசியல்வாதிகளின் ஆசீர்வாதத்துடன் செயற்படும் சில சக்திகள் முஸ்லிம்கள் தரப்பிலும் -

இரு தரப்புகளினதும் பரஸ்பர உறவுக்கு வேட்டு வைத்து வருகின்றன.

அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமரச சந்திப்பில் இவை பற்றிப் பேசப்பட்டிருப்பதாகவும், இவ்வாறு சிறுபான்மை இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் சக்திகளையே இரு சமூகங்களில் இருந்தும் புறந்தள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகின்றது.

மூன்றாம் தரப்பு, தனித் தரப்பு என்றெல்லாம் கூறி, பிரசாரம் செய்து , முஸ்லிம்களுக்கு உணர்ச்சி ஊட்டி, அவர்களையும், தமிழர்களையும் பிரித்து வைக்க எத்தனிக்கும் முஸ்லிம் தலைமைகள் குறித்தும் முஸ்லிம் மக்கள் கவனமாக இருப்பது நல்லது.

தமிழர்களும், முஸ்லிம்களும் பேச்சு மொழி காரணமாக தமிழ்ப் பேசும் மக்களே.

தற்போதைய இனப்பிரச்சினை மொழி அடிப்படையில் தான் முதலில் உருப்பெற்றது.

எனவே, மூன்றாம் தரப்புக்கு அல்லது தனித்தரப்புக்கான பேச்சும் கோரிக்கையும் முஸ்லிம் தரப்பிலிருந்து தெற்குக்கு எழுப்பப்படுவதைப் பார்க்கிலும் தமிழ்த் தலைமையை நோக்கி வலியுறுத்தப்படுவதே பொருத்தமானதும், நியாயமானதுமாகும்.

இதையே புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் 'உதயன்' - 'சுடர் ஒளி' நாளிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் -

*"பேச்சுக்களில் முஸ்லிம்களின் தனித் தரப்புக் குறித்து சில முஸ்லிம் தலைவர்கள் என்னுடன் பேசினார்கள். இது புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய விடயம். இதற்குள் தலையிட்டுக் குழப்பாதீர்கள் என்று அவர்களிடம் கூறிவிட்டேன். இயலுமானால் பிரபாகரனுடன் போய்ப் பேசுங்கள். அவருடன் ஒரு தரப்பாக வாருங்கள். அல்லது அரசுடன் இணைந்து வாருங்கள்"* - என்று கூறியிருந்தார்.

ஆகவே, பதவிக்காகவும், சலுகைகளுக்காகவும் முஸ்லிம் தலைவர்கள், கொழும்புக்குக் காவடி தூக்குவதை விடுத்து, தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் தமிழர் தலைமையுடன் கலந்துரையாடி, உரிமைக்காக வாதிட்டு, இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள ஏன் முன்வரக் கூடாது? வலுவான தமிழ்த் தலைமையுடன் ஐக்கியப்பட்டுச் செயற்படுவதன் மூலம் நியாயமான உரிமைகளை ஈட்டும் தமது முயற்சிகளில் முஸ்லிம் தரப்பு கணிசமாக வெல்ல முடியும்.

தமிழர்களோடு போட்டிக்கு நிற்பதாக வீம்பு பண்ணிக் கொண்டு, சிங்களவர்களுக்கு ஆலவட்டம் பிடிப்பதை நிறுத்தி விட்டு, தமிழர் தரப்புடன் ஒன்றிணைந்து செயற்பட விழைவதே முஸ்லிம்களுக்கும் நல்லது. தமிழர்களுக்கும் நல்லது.

இதற்கான அழைப்பும் இணக்கமும் கூட இரண்டு தரப்பிலிருந்தும் வருவதும் காலத்தின் கட்டாயமாகும்.

# டென்மார்க் நகரங்களில் டெனிஸ் மக்களுக்கு தமிழர் அரசியல் நிலைமை பற்றி விளக்கமளிப்பு

ஹெப்பன் கேஹன், பெப்.7

டென்மார்க் தமிழ் இளையோர் அமைப்பும் தமிழ் அமைப்புகளின் ஒன்றியமும் டென்மார்க் முழுவதும் பல நகரங்களில் கடந்த சனிக்கிழமை தமிழ் மக்களின் நிலை பற்றி விளக்கினர்.

தமிழ் மக்களின் அரசியல் நிலைமை டென்மார்க் தமிழ மக்களினால் சேர்க்கப்பட்ட நிதிக்கு நன்றி தெரிவிப்பு, பாதிக்கப்பட்டோரை நிதி எப்படி சென்றடைந்தது, தமிழீழ கட்டுமானம் ஆகியவை பற்றி டெனிஸ் மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இந்த நிகழ்வு ஒரே நேரத்தில் பல நகரங்களின் நடைபெற்றது.

கடும் பனிக்குளிரையும் பொருட்படுத்தாமல் டெனிஸ் வாழ் தமிழர்கள் தமிழர் தாயகத்தின் நிலைமையை டெனிஸ் மக்களுக்கு எடுத்து விளக்கும் பணியில் பெருமளவில் ஈடுபட்டனர். (ஐ)





# நல்லூர் வரியிறுப்பாளர் சங்கப் பிரதிநிதிகள் பிரதேச சபை செயலரை சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம், பெப்.7

நல்லூர்ப் பிரதேச வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர், செயலாளர் அடங்கிய குழுவினர் நல்லூர் பிரதேசசபை செயலாளரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஏற்கனவே நல்லூர் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் -

எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய அத்தியாவசியமான அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாகவும்-ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது.

வரியிறுப்பாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக இடம்பெற்ற சந்திப்பு இது என்றும் -

வரியிறுப்பாளர்களால் முன்வைக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

பிரதேசசபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

வரியிறுப்பாளர் சங்கத்தினால் நல்லூர் பிரதேச சபைச் செயலாளரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

* சீரான வடிகால் அமைப்பு (சந்தை உட்பட)
* சீரான நீர் விநியோகம்
* முக்கிய வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்துதல்
* சீர்செய்யப்படாத வீதிகளைப் புனரமைத்தல்
* காரைக்கால் இந்து மயானம், கொக்குவில் இந்து மயானம் என்பவற்றின் மயான அபிவிருத்தி சபைகளை புனரமைத்து மயான வளம், செயற்பாடுகள் போன்றவைசிறந்த முறையில் நடைபெற உதவுதல் .(எ-12)

# பருவம் முந்திய அறுவடையால் உள்ளூர் உ.கிழங்குக்கு அதிக 'மவுசு' இல்லை

அச்சுவேலி,பெப்.7

குடாநாட்டில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்காக சந்தைகளுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

உரியமுறையில் விளைச்சல் கிடைப்பதற்கு முன்னர் இவை அறுவடை செய்யப்பட்டதால் கிழங்கு சிறியதாகவும் பொருத்தமான உறுப்பமைவு கொண்டதாகவும் இல்லாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்படும் உருளைக்கிழங்கு சந்தைகளில் 70 ரூபா முதல் 80 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட உள்ளூர் உருளைக்கிழங்கு 40 ரூபா முதல் 50 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதைக் காணமுடிகின்றது. (எ-11)

## உதயவாக்கு

**மன்னிப்பதைக் காட்டிலும் பெரிய தண்டனை இருக்கமுடியாது.**

*- ஓர் அறிஞர்.*

## நாளை

**தை 25**
**புதன்கிழமை**
**08.02.2006**
**திதி: ஏகாதசி**
**பின்னிரவு: 05.03**
**நட்சத்திரம் : மிருகசீரிடம்**
**பின்னிரவு: 02.08 வரை**
**சுபநேரம் : 05.05-06.35**
**ராகுகாலம் : 12.35 - 02.05**
**(யாவும் பழைய நேரப்படி)**

# ஆயிரத்து 20 புதிய மோ.சைக்கிள்கள் கடந்த வருடத்தில் செயலகத்தில் பதிவு

யாழ்ப்பாணம், பெப்.7

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் கடந்த வருடம் ஆயிரத்து 20 புதிய மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இத்தகவலை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.பத்மநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக 10 ஆயிரத்து 207 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவற்றில் 8 ஆயிரத்து 854 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஏற்கனவே இருந்த விண்ணப்பங்களுடன் 9 ஆயிரத்து 602 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த வருடம் 5 ஆயிரத்து 13 பேருக்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டன. அவர்களின் விண்ணப்பங்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன - என்றார் அவர். (எ-202-203)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 26 ஆம் நாள் [08.02.2006] புதன்கிழமை காலை 9.30- 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புதல்வன் திருநிறைசெல்வன் **இரத்தினசிங்கம்** அவர்கட்கும்

எமது புதல்வி திருநிறைசெல்வி **ஸாமினி** அவர்கட்கும்

இறைவன் அருளால் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

சங்கரப்பிள்ளை (இளையதம்பி) குடும்பத்தினர்.
நிரந்தர முகவரி: அரசர்கேணி, பளை.
தற்போதையமுகவரி: ஐயனார்கோயில், கொடிகாமம்.

இராஜேந்திரன் குடும்பத்தினர்.
சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு.

(46502) (39.32.19.45)



# SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
## ஆரம்பம் 11,15.02.2006

Special Offer 2000/=

கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | Duration 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | Duration 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | Duration 5 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | Duration 6 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | Duration 2 Months |

- குறைந்த கட்டணம்
- அங்கீகாரமுள்ள சான்றிதழ்
- இலவசப் பாடநூல்
- வரையறையற்ற செய்முறை

**Softview Computer College**

www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.

scclanka@hotmail.com
55, Arasady Road, Jaffna, Sri Lanka.

T.P: 021 2225170, 0777846811



# இதோ!, யாழ் மண்ணில் வெகு விரைவில்....

**MAK Cost Cutter Super market**

Mega Super Market

மளிகைப்பொருள்கள், ஐஸ் கிறீம்
இனிப்பு வகைகள், பழப்பானங்கள்
மதுபானங்கள், பழவகைகள்
இறைச்சி வகைகள், பாதணிகள், மருந்து வகைகள்
மின்னியல், இலத்திரனியல், பிளாஸ்ரிக்
அன்பளிப்பு பொருள்கள், வீட்டுப்பாவனைப்பொருள்கள்
மேலும் பற்பல பொருள்களுடன் உதயமாகவுள்ளது...

உங்களுக்கு அன்றாடம் தேவையான பொருள்களை நியாயமான விலையில் ஒரே கூரையின் கீழ் புதிய மெருகுடன் தரமாக பெற்றுக்கொள்ள புதியதோர் உதயம்....

**MAK COST CUTTER SUPER MARKET.**
# 484, HOSPITAL ROAD, JAFFNA.
T.P NO: 021 222 9777.
E-mail: mak_cost@yahoo.com.


## பாராட்டு விழா

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடந்த இருபத்தாறு வருடங்களாகப் பணியாற்றி ஓய்வுபெறும கைதடி மேற்கைச் சேர்ந்த கந்தன் ஞானமுத்துவின் சேவை நலன் பாராட்டுவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு கோப்பாய் ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது. (எ-75)


# குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



- ★ திருமணம் (சோடனையுடன்)
- ★ சுற்றுலா
- ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
S.SRIRANGAN,
SRI PALM BEACH REST,
RAJA THEATRE COMPLEX,
JAFFNA.

0777 283595,
0777 222180,
0773 126744.

(47736)(32-19-45)


## வருடாந்த விளையாட்டுப்போட்டி: யாழ்.செயலகத்தில் முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது குறித்து முக்கிய தீர்மானங்களை எடுக்கும் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

மாவட்டத்தில் பணிபுரியும் விளையாட்டு அலுவலர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வருட ஆரம்பத்தில் நடத்தப்பட வேண்டிய விளையாட்டுப் போட்டிகள் மாவட்டத்தின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

மேற்படி போட்டிகளை ஆரம்பித்து நடத்துவது குறித்து முக்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளன என யாழ். செயலக விளையாட்டு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-202-203)


சிவமயம்

# வண்ணை கோம்பையன் மணல் இந்து மயான பரிபாலன சபை

## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் : 12.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி (பு.நே)
இடம் : மயான மண்டபம்
தலைவர் : கலாநிதி க.குணராசா அவர்கள்

நிகழ்ச்சி நிரல் : 1. தேவாரம் 2. அறிக்கைகள் 3. தலைமையுரை 4. புதிய நிர்வாகிகள் தெரிவு 5. பிறவிடயங்கள்.

- * ஆயுட்கால உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் வருடாந்த சந்தாப் பணத்தைச் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளவும்.
- * புதிய உறுப்பினர்களாக இணைய விரும்புபவர்கள் கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொண்டு உறுப்புரிமை பெற விண்ணப்பிக்கலாம்.
- * கூட்டத்திற்கு உரிய நேரத்தில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கலாநிதி க.குணராசா
தலைவர்

142/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

இரா.செல்வவடிவேல்
செயலாளர்.

(46492)(32-45-19)



# ஏகாதசித் தீர்த்தம்

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம் - அளவெட்டி

நாளை (08.02.2006) புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல்10 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும், தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பொ. ப. சபை.
நாகேஸ்வரம் - அளவெட்டி.

(46171)(32-19-45)



**THE ROYAL COLLEGE OF JAFFNA**

"பாலர் பாடசாலை" ஆங்கிலத்திலும் தமிழிலும் தனித்தனிக் கவனம். பொறுப்பாசிரியை திருமதி விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். [பதிவுக் கட்டணம் 2000/- மாதக்கட்டணம் 200/-] (46507) (24-32-19-45)



# இலிகிதர் தேவை

அம்பாள் மரக்காலை, 261, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (மர விற்பனை நிலையத்திற்கு) அனுபவமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட ஆள் தேவை. தொடர்பு: 0777111147. மேலதிக விவரம் நேரில் வரவும். (46504) (24-32-19)



# மொழிபெயர்ப்பு

நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், கடிதங்கள் முதலியவை தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய எந்த மொழியிலிருந்தும் அவற்றுள் எந்த மொழிக்கும் மொழிபெயர்த்து கணனியில் பிரதிகள் எடுத்துத் தரப்படும். கடிதங்கள், சத்தியக் கடதாசி, சகலவிதமான விண்ணப்பப் படிவங்கள் நிரப்புதல் ஆகியவையும் செய்து தரப்படும். T.Sagathevan,

தொலைபேசி: 2223520. (46509)(32-19-45)



# 16ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**சபாபதி திருநாவுக்கரசு**

தோற்றம் 11★07★1937
மறைவு 23★01★2006



மண்மகிழ வந்துதித்த பண்பான திருவுருவே!
மக்கள் சேவையிலே மனம் மகிழ்ந்த மன்னவரே!
கை வைத்தியம் செய்தவரே, ஊர்போற்றும் ஜோதிடரே!
இயற்கையின் நியதி வழி மண்ணில்
மறைந்தாலும்– உம்
நிறைந்த நினைவுகள் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.
16ஆவது நாளதனில் எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

கலைமகள் சனசமூக நிலையத்தினரும்,
மாதகல் வில்வளை வாழ் மக்களும்.

(46491)(32-19-45)



# 31ஆம் நாள் நினைவலைகள்



திருமதி
**வேதநாயகம் மேர்சி தங்கம்மா**

மண்ணின் மடியில் 12★12★1927
இறைவன் அடியில் 08★01★2006

அன்பு என்றால் அம்மா
அன்பால் எம்மை ஆண்டவளே!
மாதம் ஒன்று ஆனபோதும்
அன்பு முகம் மறக்கவில்லை.

கடந்த (08.01.2006) அன்று இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் 31ஆம் நாள் நினைவு ஆராதனை எமது இல்லத்தில் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லியடி வடக்கு,
கரவெட்டி.

என்றும் தங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(46509)(32-19-45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலுக்குள் பெரும் தீ பரவிய பின்னரும் அதிகாரிகள் பாராமுகமாக இருந்தது ஏன்?

## எகிப்து கப்பல் அனர்த்தம் குறித்து பரபரப்புத் தகவல்கள்

சபாஹா,பெப்.7



செங்கடலில் எகிப்து பயணிகள் கப்பல் மூழ்கி ஆயிரம் பேர் உயிரிழந்தது எப்படி என்பது குறித்து புதிய தவல்கள் கிடைத்துள்ளன. சவூதி அரேபியாவில் உள்ள துபா துறைமுகத்தில் இருந்து எகிப்து நாட்டில் உள்ள சபாஹா துறைமுகத்துக்குச் சில நாள்களுக்கு முன் புறப்பட்டுச் சென்ற பிரமாண்டமான பயணிகள் கப்பல் நடுவழியில் கடலில் மூழ்கியது. எகிப்து நிறுவனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பலில் ஆயிரத்து 400 பேர் பயணம் செய்தனர். இதில் 300இற்கும் அதிகமானோர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். மீதியுள்ளவர்களின் கதி என்ன என்பது குறித்து இதுவரை தகவல்கள் இல்லை.

உயிருடன் மீட்கப்பட்டு தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள் நடந்த விபத்து குறித்து கூறியதாவது:-

நாங்கள் பயணம் செய்த கப்பலில் 200 கார்களும் கொண்டுவரப்பட்டன. கார்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில்



தான் முதலில் தீப்பிடித்துக்கொண்டது. உடன் ஊழியர்களிடம் தகவல் கூறினோம். ஆனால், அவர்கள் அதைப் பற்றிப் பெரிதும் கவலைப்படாமல் நிதானமாக பணி செய்தனர். பதற்றமடைந்த பெண் பயணிகளை அவர்களது அறைகளில் அடைத்துப் பூட்டிவிட்டனர்.

காரணம் கேட்டபோது அவர்களால் வேலைக்குத் தொந்தரவாக இருக்கிறது என்று மிரட்டல் பதிலே கிடைத்தது.

கப்பல் புறப்பட்ட சில மணி நேரத்திலேயே தீப்பற்றிக் கொண்டது. அப்போது சவூதி அரேபிய கடற்கரையில் இருந்து 30 கி.மீ., தூரத்தில்தான் இருந்தோம். ஆனால், ஊழியர்கள் சவூதி கரைக்குத் திரும்பாமல் 179 கி.மீ. தூரத்தில் இருந்த எகிப்து கரையை நோக்கிக் கப்பலைத் தொடர்ந்து இயக்கினர். இதற்கான காரணத்தைக்கடைசிவரை அவர்கள் கூறவேயில்லை.

ஒரு கட்டத்தில் தீயை அவர்களால் அணைக்க முடியவில்லை. அப்போது பெரிய வெடிச்சத்தம் கேட்டது. அடுத்து ஐந்து நிமிடங்களில் கப்பல் மூழ்கிவிட்டது.

- இவ்வாறு அவர்கள் கூறினர்.

எகிப்து நட்டின் செங்கடல் மாகாண ஆளுநர் ரஷிதி கூறுகையில்:-


கப்பல் ஊழியர்கள் தீயை அணைத்துக் கொண்டிருந்த போது கப்பல் ஒரு பக்கமாகச் சாயத் தொடங்கியது. ஆயிரக்கணக்கான பயணிகள் அலறியடித்துக்கொண்டு அங்கும் இங்கும் ஓடினர். ஒரு கட்டத்தில் அனைவரும் கப்பலின் ஒரே பக்கத்தில் குழுமத் தொடங்கினர். அப்போது காற்று பலமாக அடித்ததால் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து கப்பல் கடல் நீரில் மூழ்கக் காரணமாகிவிட்டது - என்றார்.

அதேபோல் மீட்புப் பணிகளும் குழப்பமாகவே நடந்தது. கப்பல் மூழ்கிய இடத்துக்கு எகிப்து மீட்புக் குழுவினர் 10 மணி நேரத்துக்குப் பிறகே சென்றனர். அதற்குள் ஏராளமானவர்கள் நீரில் மூழ்கி இறந்துவிட்டனர். மேலும் சம்பவ இடத்துக்குப் போர்க் கப்பல் அனுப்புவதாகப் பிரிட்டன் கூறியதையும் மீட்பு விமானத்தை அனுப்புவதாக அமெரிக்கா கூறியதையும் எகிப்து அரசு ஏற்க மறுத்துவிட்டது.

**மிதக்கும் சடலங்கள்**

இதேவேளை -

ஆயிரத்து 400 பேர் பயணம் செய்த அக்கப்பலில் இருந்து மீட்கப்பட்டவர்கள் தவிர, ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ஆயிரம் பேர் பலியாகிய இவ்விபத்து, அண்மைக் காலத்தில் நடந்த மிகப் பெரும் கப்பல் விபத்தாகக் கருதப்படுகிறது.



மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்கள் இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை.

ஓர் இளம் தாயும் தந்தையும் தம் குழந்தையை அணைத்தபடி கடலில் குதித்து உயிர்தப்ப நினைத்தனர். ஆனால், அவர்களுக்கு நீந்தத் தெரியவில்லை. "கடலில் எங்கு பார்த்தாலும் பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்களின் சடலங்



கள்தான் மிதக்கின்றன" என்று கூறினார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சவூதி இளைஞர் ஒருவர்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த 'அல்-சலாம் பெக்காசியோ - 98' என்ற இந்தக் கப்பல் சபாஹா நகரை நோக்கிச் சென்று கொண்டு இருந்தபோது வெள்ளிக்கிழமை நடுக்கடலில் தீப்பிடித்து மூழ்கிய கப்பல் கடலின் தரைக்குச் சென்றுவிட்டது. அது மிகவும ஆழமும் கடல் நீரோட்டமும் மிகுந்தபகுதியானதால் மீட்புப் பணியை மேற்கொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது என்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்தனர்.

கடலில் பலத்த காற்று வீசுவதால் மீட்புப் பணியாளர்களின் நம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டுவருகிறது.

இரண்டு நாள்களுக்கு மேல் ஆகிவிட்டால் யாரையும் உயிருடன் மீட்பதற்கான வாய்ப்பு இல்லை என்று டாக்டர் அப்துல் ஹமீது என்பவர் தெரிவித்தார்.

இதற்கிடையே கப்பலில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் சபாஹா துறைமுகத்தில் 2 நாள்களாகக் காத்திருக்கின்றனர்.

'உயிருடன்தான் மீட்கவில்லை. உடல்களையாவது மீட்டுத் தருவார்களா'- என்ற எதிர்பார்ப்புடனும் கப்பல் உரிமையாளர்கள் மீது கடும் கோபத்துடனும் அவர்கள் கரையில் நிற்கின்றனர்.

(ஐ)

## பத்திரிகையில் நபியின் கேலிச்சித்திரம்: டென்மார்க் மீது முஸ்லிம் நாடுகள் சீற்றம்

கொப்பன்கேகன்,பெப்.7

டென்மார்க்கில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று நபிகள் நாயகத்தைக் கேலிச் சித்திரமாக வெளியிட்டமை முஸ்லிம் உலகில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக முஸ்லிம் நாடுகளின் கடும் சீற்றத்துக்கு டென்மார்க் உள்ளாகியிருக்கிறது.

டென்மார்க் பத்திரிகை, முஸலிம்களால் உலகம் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கின்றது என்று பொருள்படும்படி நபிகள் நாயகத்தின் தலைப்பாகை வடிவில் வெடிகுண்டை வரைந்து அதில் திரி எரிந்து கொண்டிருப்பது போலவும், நபிகள் கையில் வாள் ஒன்றை வைத்துக் கொண்டு கண்களைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண் டிருப்பது போன்றும் சித்திரம் வரைந்து வெளியிட்டது. இதே சித்திரத்தை பிரான்ஸ் நாட்டில் உள்ள பத்திரிகைகள் மீள் பிரசுரம் செய்திருந்தன.

இந்தச் சம்பவம் முஸ்லிம் நாடுகளை ஆத்திரத்துக்குள்ளாக்கியிருக்கின்றது. முஸ்லிம் நாடுகளில் உள்ள டென்மார்க் துதரகங்களில் இருக்கும் தூதுவர்கள், அதிகாரிகள் ஆகியோர் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

உலக அரங்கில்

டென்மார்க்கில் உள்ள எகிப்து தூதரகம் காலவரையறையின்றி தனது செயற்பாடுகளை இடை நிறுத்திக் கொண்டது. லெபனானில் உள்ள டென்மார்க் தூதரகம் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. இதனையடுத்து முஸ்லிம் நாடுகளில் உள்ள டென்மார்க் தூத ரகங்கள் மூடப்பட்டு வருகின்றன.

இதனிடையே-

பிரான்ஸில் இருந்து வெளியாகும்( France Soir) என்ற பத்திரிகை நபிகள் நாயகத்தின் கேலிச் சித்திரத்தை மீள் பிரசுரம் செய்தது. இதனால் அந்தப் பத்திரிகைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு பிரான்ஸில் உள்ள முஸ்லிம்கள் தயாரானார்கள். இதனையடுத்து அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் நேற்றுமுன்தினம் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

(ஐ-8)

## இந்தோனேஷியாவின் சுலாவேசி தீவில் பூகம்பம்

ஜகார்தா,பெப்.7

இந்தோனேசியாவில் உள்ள சுலாவேசி தீவில் ஞாயிற்றுக்கிழமை பூகம்பம் ஏற்பட்டது.

இது ரிச்டர் அளவுகோலில் 5.1 ஆகப் பதிவானது.

சுலாவேசி தீவின் தலைநகரான மனடோவில் இருந்து 160கி.மீ. தொலைவில் மலுகு கடற் பகுதியில் இப்பூகம்பம் மையம் கொண்டிருந்தது. சேதங்கள் பற்றி உடனடியாகத் தகவல் எதுவும் இல்லை. (ஐ)






## அணுகுண்டுகள் தயாரிக்க ஈரானை உலக நாடுகள் அனுமதிக்காது

### அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிப்பு

கிராபோட்,பெப்.7

அணுகுண்டுகள் தயாரிக்க ஈரானை உலக நாடுகள் அனுமதிக்காது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

அதிபர் புஷ் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் -

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி கூட்டத்தில் ஈரானுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கான முதற்கட்ட நடவடிக்கை.

அணுகுண்டுகள் தயாரிப்பதற்கு ஈரானுக்குத் தடை விதிப்பதற்கான ஆரம்பக் கட்ட பணிதான் இது.

இந்த நோக்கம் நிறைவேற சர்வதேச நாடுகளுடன் இணைந்து நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்து எடுக்கும் - என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)

## பேச்சுக்கான கதவுகள் இன்னும் திறந்தே உள்ளன - ஈரான்

தெஹ்ரான், பெப்.7

பேச்சுவார்த்தைக்கான கதவுகள் இன்னும் திறந்தே உள்ளன என்று ஈரான் கூறியுள்ளது.

இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஹமீத் ராஜா அசீபி தெஹ்ரானில் செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:-

ஈரான் அணுவிசைத் திட்டப் பிரச்சினையை ஐ.நா.பாதுகாப்புச் சபையின் பரிசீல னைக்கு அனுப்ப சர்வதேச அணுவிசை ஏஜென்ஸி தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

பாதுகாப்புச் சபையைப் பார்த்து நாங்கள் அஞ்சவில்லை.

எங்களது அணுசக்தி நிலையங்களைப் பார்வையிட சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியை இனி அனுமதிக்க மாட்டோம். செறிவூட்டப்பட்ட யூரேனியம் உற்பத்தியை முழு அளவில் தொடங்குவோம் - என்றார் அசீபி.

இதற்கிடையில், உங்களது சந்தோஷத்துக்காக இதுபோன்று எத்தனை தீர்மானங்களை வேண்டுமானாலும் நிறைவேற்றி அனுப்புங்கள்.

எங்களது அணுசக்தித் திட்டங்களை உங்களால் தடுத்து நிறுத்த முடியாது - என்று அமெரிக்காவுக்குப் பதிலளிக்கும் விதமாக இஸ்லாமியக் குடியரசு நியூஸ் ஏஜென்ஸிக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார் ஈரான் அதிபர் முஹமது அகமதி நிஜாத்.

சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியின் போர்வையில் எங்களது அணுசக்தித் திட்ட ஆலைகளைப் பார்வையிட்டு, எங்களது பலத்தை அறிய அமெரிக்கா முனைந்துள்ளது. இதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## அல்-ஜெஸீராவின் ஆங்கில மொழி ஒலிபரப்பு

டுபாய், பெப் 7

மே மாதம் முதல் ஆங்கில மொழியில் செய்திச் சேவையைத் தொடங்க 'அல்ஜெஸீரா' தொலைக்காட்சி திட்டமிட்டுள்ளது.

புதிய சனலுக்கு 'அல்ஜெஸீரா இன்டர்நஷனல்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. புதிய சனலில் உலகச் செய்திகள் அனைத்தும் ஒலிபரப்பப்படும். இதற்காக உலக நாடுகளில் உள்ளூரில் உள்ள பத்திரிகையாளர்களைப் பணியில் சேர்க்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தற்போது டோஹாவில் இருந்து செய்திகளை ஒலிபரப்பி வரும் இந்நிறுவனம் இனி லண்டன், கோலாலம்பூர் மற்றும் வாஷிங்டன் டி.சி யில் இருந்தும் செய்திகளை ஒலிபரப்பத் திட்டமிட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை மாணவரிடையில் ஓவியப்போட்டிக்கு ஏற்பாடு

மண்டைதீவு, பெப்.7

கல்விக்கான உலக உணவு செயற்றிட்டத்தின் கீழ், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களிடையில் சித்திரப் போட்டி ஒன்றை நடத்துவதற்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை சகல வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் மாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உணவு செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மாணவர்கள் மட்டும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றமுடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''கல்விக்கான உணவு'' என்னும் கருப்பொருளை உள்ளடக்கியதாக சித்திரங்கள் வரையப்பட வேண்டும்.

வலயரீதியாகச் சித்திரங்கள் தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்கள் மட்டும் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குரிய உலக உணவுத்திட்ட உப அலுவலகத்தில், எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கப்படவேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(எ-88)

## ஊடுபாய்ச்சாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வலி.வடக்கு, பெப்.7

இலங்கை சுகாதார பராமரிப்பு மற்றும் போஷனை அமைச்சினால் இருதய நோய் ஊடுபாய்ச்சாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை தேசிய வைத்தியசாலை, லேடி நிஜ்வே குழந்தைகள் வைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, கண்டி போதனா வைத்தியசாலை ஆகியவற்றிற்கே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தில் பௌதிகவியலுடன், விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர்கள் வெளிவாரியாகவும்-உள்வாரியாக விண்ணப்பிப்பவர்கள் 5 வருட அனுபவம் பெற்ற தாதிய உத்தியோகத்தராகவும் இருத்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சை மூலம் இடம்பெறும். விண்ணப்பம் குறித்த மேலதிக விவரங்களை 03.02.2006 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

(எ-86)

## அறநெறி மாணவருக்கு ஆன்மீகச் சஞ்சிகை

மானிப்பாய்,பெப்.7

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு 'அருள்நிதி' ஆன்மீக சஞ்சிகைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பன்னிரு திருமுறைகள், அருட்பாடல்கள், சைவசமயக் கட்டுரைகள் அடங்கிய இந்த நூல் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த விசுவர் சிதம்பரி சின்னத்தம்பியின் நினைவாக அவரது குடும்பத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. (எ-90)

## மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து சிறுவன் காயம்

தென்மராட்சி,பெப்.7

மாமரத்தில் ஏறி விளையாடிய சிறுவன் தவறி வீழ்ந்ததில் கால் முறிந்தது.

கடந்த வியாழனன்று மிருசுவில் தவசிகுளம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த துரைராசா துபிசன் (வயது 12) என்னும் சிறுவனே கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

(எ-117)

## மெய்வன்மைப் போட்டி

வலி.வடக்கு,பெப்.7

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வி.அருளாந்தமும் சிறப்பு விருந்தினராக பொன்.தேவராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-86).

## சாரணர் ஜம்போரி இம்முறை கண்டியில்

சாவகச்சேரி, பெப்.7

இலங்கை சாரணர்களுக்கான ஜம்போரி நிகழ்வு இம் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை கண்டியில் நடைபெறவுள்ளது.இந்த ஜம்போரி நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்களை எதிர்வரும்18 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒன்றுகூடுமாறு கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்க ஆணையாளர் எஸ். புவனேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-31)


**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHO THERAPY)**
**இப்பொழுது யாழ்ப்பாணத்தில்**

07-02-2006 - 11-02-2006

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
☼ சக்தி குறைவு ☼ ஞாபக மறதி ☼ பயம் ☼ நடுக்கம்
☼ நித்திரைக் குறைவு ☼ ஆண்மைக் குறைவு ☼ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
**பிரபல மனோதத்துவ நிபுணர்**
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சீ-47223) (21.16.17)



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 20 - 06 - 1982



மறைவு 08 - 01 - 2006

**அமரர் மாணிக்கம் செல்லம்மா**

எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும்
மாறாது மறையாது
உங்கள் ஆத்ம சாந்திக்கு இந்நாளில் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக இதை ஏற்றுக்கொள்ளவும்)

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
(46437)(21.11)
தகவல்:
குடும்பத்தினர்.



**இருபாலை தென் கோவை கற்பக விநாயகர் ஆலய திருப்பணிச்சபை**
**பொதுக்கூட்டம்**

*காலம்:*
பார்த்திப வருடம் மாசித் திங்கள் இருபத்தொன்று
(05.03.2006) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4 மணி.

*இடம்:* ஆலய மண்டபம்
*தலைவர்:* பண்டிதர் திரு.த.இராசரத்தினம்
*விடயம்:*
1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல்
4. பொருளாளர் அறிக்கை சமர்ப்பித்தல்
5. புதிய நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்
6. ஆலய வளர்ச்சி சம்பந்தமான பொது விடயங்கள்
7. பரிபாலன சபை அமைக்கும் தீர்மானம் எடுத்தல்
8. நன்றியுரை

கற்பக விநாயகர் அடியார்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த.இராசரத்தினம் (தலைவர்)
இரா.ஜெயானந்தன், சு.சிவலோகநாதன் (இணைச்செயலாளர்)
(46468)(21.11.)



**நீங்காத நினைவலைகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 10 - 04 - 1927



மறைவு 09 - 01 - 2006

**திருமதி கனகம்மா தில்லைநாயகம்**

கடந்த 2006.01.09 திங்கட்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி கனகம்மா தில்லைநாயகம் அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (2006.01.08) புதன்கிழமை காலை 8 மணியளவில் தெணி அம்மன் வீதி, அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் வீட்டில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கின்றோம்.

கனகஸ்தான்,
கல்லூரி வீதி,
பருத்தித்துறை
(46485)(21.11.32)
குடும்பத்தினர்.
தகவல்:
கா.சந்திரகாந்தன்.



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ~ 2006**

**80% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 750/= Duration :- 3 Months | Diploma in Desktop Publishing ~~6000~~/= 1200/= Duration :- 4 Months | Diploma in Web page Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Diploma in Hardware Engineering ~~6000~~/= 1200/= Duration :- 3 Months | Accounting Package ~~7000~~/= 1400/= Duration :- 3 Months |
| Diploma in Computer Science ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Honors Diploma in Computer Science ~~9000~~/= 1800/= Duration :- 5 Months | Diploma in Auto CAD ~~6000~~/= 1200/= Duration :- 3 Months |

**Advances Courses**

**50% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~5000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

வகுப்புகள் ஆரம்பம்
*Batch I :- 10/02/2006*
*Batch II :- 11/02/2006*
*Batch III:- 12/02/2006*
*Batch IV:- 18/02/2006*

February 28ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாட்டில் தேசிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

*இம்மாதம் 10ஆம் திகதி முதல் இரவு,பகல் ஆட்டங்களாக நடக்கும்*

கிளிநொச்சி,பெப்.7

தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் இவ்வருடத்துக்கான தேசிய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் இரவு, பகல் ஆட்டங்களாக நடை பெறவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மாவீரர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப் போட்டியில் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்ட அணிகளை ஒன்றிணைத்து எட்டு மாவட்ட அணிகளையும் ஒன்றிணைத்து இந்த தேசிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தத் தேசிய உதைபந்தாட்டப் போட்டி ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிமுதல் நடைபெற்றுவந்த போதிலும் இவ்வருடம் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் காரணமாக இம்முறை போட்டியின் திகதி மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கழகங்கள் தம்மைத் தயார்செய்து கொள்ளவேண்டும் என தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன் கேட்டுள்ளார். (எ-6)

# வறிய மாணவருக்கான கொடுப்பனவு ஏழு மாதங்களாகக் கிடைக்கவில்லை

ஒட்டுசுட்டான்,பெப்.7

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சிறுவர் நன்னடத்தைக் காப்பகத்தினால் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த 500 ரூபாய் கொடுப்பனவு கடந்த 7 மாதங்களாக வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வி.சிவபாலசுப்பிரமணியத்திடம் கேட்டபோது:-

பணம் பெறும் சிறுவர்கள் தொடர்பான விவரங்கள், அறிக்கைகள் திருகோணமலை சமூகத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனினும், சமூகத் திணைக்களம் இதுவரை உரிய நிதியை அனுப்பிவைக்கவில்லை. இதனாலேயே இதுவரை சிறுவர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. உரிய நிதி கிடைத்தும் மாணவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்படும் - என்றார்.(எ-341-204)

# இளையோர் மேம்பாட்டு நிலையத்தில் கணனிப் பயிற்சி

கிளிநொச்சி இளையோர் மேம்பாட்டு நிறுவனத்தில் தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தால் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இளையோர் மேம்பாட்டு நிறுவன அதிபர் எஸ்.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் கணனிப் பயிற்சி வகுப்பினை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

சிறப்புரையினை பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி நிகழ்த்தினார். மாணவர்களுக்கான ஆரம்பப் பயிற்சிகளைக் கணனி ஆசிரியர் கீதவேங்கையன் வழங்கினார். பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் நன்மை கருதியே இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட் து. (எ-6-352)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலகக் கட்டடம் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது

ஒட்டுசுட்டான்,பெப்.7

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது முற்றாக அழிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செலயகம் 'நீர்ப்' திட்டத்தின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய கட்டடத்தின் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி சுபாஜினி கந்தையா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினைத் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணனும் பிரதேச செயலகக் கொடியினை பிரதேச செயலர் செல்வி சுபாஜினி கந்தையாவும் ஏற்றிவைத்தனர்.

புதிய செயலகத்திற்கான பெயர்ப் பலகையினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரைநீக்கம் செய்துவைத்தார். 'நீர்ப்' திட்ட அன்பளிப்புத் தொடர்பாக பொறிக்கப்பட்ட பலகையினைக் கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் என்.சோதிநாதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பிரதேச செயலகக் கட்டடத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்..

தொடர்ந்து அரங்க நிகழ்வில் மங்கள விளக்கினை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர், 'நிகொட்' திட்டப் பணிப்பாளர் செ.ரகுநாதபிள்ளை, முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஆசியுரையை ஒட்டுசுட்டான் ஆலய பிரதமகுரு, மாங்குளம் பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் சுதாகரன் ஆகியோரும் கருத்துரைகளை அரசியல்துறைப் பொறுப்பாளர், பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் வ.சிவஞானலிங்கம் ஆகியோரும் நிகழ்த்தினர். செயலகத்தின் திறப்புவிழாவை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வாக பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 10 பேருக்கு தமிழீழ காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-6-34)

# நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் வைத்தியசாலைக்கு சக்கரநாற்காலிகள்

வட்டக்கச்சி,பெப்.7

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் இரண்டு சக்கரநாற்காலிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 20ஆம் திகதி இந்த நாற்காலிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கும் ஒரு சக்கரநாற்காலி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பரந்தன், திருநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவருக்கும் அவர்களது நோய்பாதிப்பு, குடும்ப நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு சக்கரநாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது. (எ-405-203)



ஜெயபுரம் அ.த.க.பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான வரவேற்பு விழா அண்மையில் இடம்பெற்றது. வரவேற்பளிக்கப்பட்ட மாணவர்கள் மாலைகளுடன் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்:பொ.தங்கராசா)*




# புதுக்குடியிருப்பு விக்னேஸ்வராவில் இரண்டு மாடிக் கட்டடம் திறப்பு

புதுக்குடியிருப்பு,பெப்.7

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் செல்வி வசந்தா கந்தையா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி மேரி இமெல்டா சுகுமார், புதுக்குடியிருப்பு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நா.சண்முகநாதன், புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜி.எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.தர்மேந்திரா ஏற்றிவைத்தார். தொடர்ந்து வித்தியாலயப் பெயர்ப் பலகையினைப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் செ.தயானந்தா திரைநீக்கம் செய்துவைத்தார்.

கட்டடத்தினை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நாடாவை வெட்டித்திறந்துவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், முல்லைத்தீவு வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) ச.நாகரத்தினம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.தர்மேந்திரா, தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நா.சண்முகநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற செல்வி தாட்சாயினிக்கு அரச அதிபர் பரிசில் வழங்கினார். (எ-6-353)

# வவுனியா வடக்கு, தெற்கு பிரதேச வீரர்களுக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் சீருடை

கிளிநொச்சி,பெப்.7

இளையோர் செயற்பாட்டு நிறுவனம் விளையாட்டு வீரர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு ஒன்றை அண்மையில் புளியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தியது.

வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாறன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் தேசியக் கொடியினை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன. இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதிப் பொறுப்பாளர் இளவரசன், வவுனியா வடக்கு விளையாட்டு உத்தியோகத்தர் அமலன், வவுனியா தெற்கு விளையாட்டு உத்தியோகத்தர் வசீகரன், வவுனியா மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுநர் எம். பி.பர்சூத் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20 விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் மற்றும் விளையாட்டு வீரர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தமக்குரிய சீருடைகளைப் பெற்றுக் கொண்டனர் என அந்த நிறுவனம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிறப்புற நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி,பெப்.7

சிறுவர் அரங்கப் பயிற்சியினை நிறைவு செய்த சிறுவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை அரசியல் துறை மக்கள் தொடர்பாளர் வின்சன் ஏற்றிவைத்தார். விழாச் சுடரினை தமிழீழ ஊடகப் பிரிவைச் சேர்ந்த அறிவன் ஏற்றிவைத்தார்.

மாணவர்களுக்கான பரிசில்களை ஆதவன் ஆசிரியர், நுண்கலைக் கல்லூரிப் பணிப்பாளர் தணிகைமாறன், நாடகக் கலைஞர் நல்லூர் சுந்தரா மற்றும் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் வழங்கினர். (எ-6)



இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் விளையாட்டு வீரர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் தேசியக் கொடியை விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் விளையாட்டு வீரர்களுக்கான சீருடைகள் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை யும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சண்முகநாதன்

*(முன்னாள் சாரதி, இ.போ.ச.)*



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகநாதன் 02.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - அருளம்மா தம்பதியரின் மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரரும் சத்தியதேவியின் அன்புக் கணவரும் வாமதேவன் (ஜேர்மனி), நந்தகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை), ரேணுகா (ஹொலண்ட்), சுபாசினி(ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி), தயானந்தி(ஜேர்மனி), அமுதரஞ்சினி (H.N.D.A, முதலாம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌந்தினி (ஜேர்மனி), பத்மராணி (கொட்டடி, யாழ்ப்பாணம்), சுதாகரன்(ஹொலண்ட்), சிவபாதசுந்தரம்(ஜேர்மனி), மகிழ்ராஜ்(ஜேர்மனி), சூரியமூர்த்தி (ஜேர்மனி)ஆகியோரின் மாமனும் விஜினன், தசாகன், சுஜின், ரம்யா, சாருஜன், சாரா, சகானா, சுஜானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
**ச.நந்தகுமார்**
**(பவா- மகன்).**

(46479)(18-32-11)

## வழுக்கையாற்று புனரமைப்புப் பணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.7

'நியாப்' திட்டத்தின் கீழ், வழுக்கையாறு புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வழுக்கையாற்றின் பிரதான வாய்க்கால், கிளைவாய்க்கால் மற்றும் அவற்றோடு தொடர்புடைய குளங்கள் போன்றவையே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

வழுக்கையாறு புனரமைப்புப் பணிகள் நீண்டகாலமாக இடம்பெறாமல் இருந்து வந்தன. இதனால், வாய்க்கால்களின் அணைகள் சீரான முறையில் அமைந்திருக்கவில்லை. அத்துடன், மழை காலங்களில் வெள்ளம் குடிமனைகளுக்குள்ளும், விவசாயப் பயிர்களுக்குள்ளும் பாய்ந்து பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தி வந்தது.

இதனையடுத்தே வழுக்கையாற்றைப் புனரமைப்பதற்கு உலகவங்கி முன்வந்துள்ளதாக யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-14)

## புங்குடுதீவில் மாடு திருட்டு அதிகரிப்பு

புங்குடுதீவு,பெப்.7

புங்குடுதீவில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளைக் களவாகப் பிடித்து இறைச்சிக்கு வெட்டுவது அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இவ்வாறு களவாகப் பிடித்து வெட்டப்படும் மாடுகளின் தோல் மற்றும் உடற்பாகங்கள் பாவனையற்றிருக்கும் கிணறுகளுள் போடப்படுவதாக மக்கள் கூறுகின்றனர். (எ-188)

## நடேஸ்வராக் கல்லூரி அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்.நடேஸ்வராக் கல்லூரியின் அதிபர் பதவிக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

# இரண்டாவது ஆண்டு நினைவு

*அமரர்*

## மடுத்தீஸ் அழகுமணி

மண்ணில்: 01.06.1919
விண்ணில்: 07.02.2004



நாலாறு மாதங்கள் ஆச்சோ- எங்கள்
நல்லோனின் முகம் காணாது போச்சோ
காட்டாற்று வெள்ளம் போல - எங்கள்
சோகம் தான் தோன்றலாச்சோ
வினைப்பயன் என்றா சொல்ல - உங்கள்
பிரிவினால் துயருற்ற சொல்(ை)ல
கருவுற்ற கவலை எல்லாம் - இன்னும்
கலையாத சோகம் தான் என்ன...?
அரவணைத்து நின்ற ஐயா - இன்றும்
எம்மை அணைகாத்து நின்றாய் மெய்யா(ய்)
துணை கேட்டு நின்றோம் நாளும் - அந்த
தூயவன் அருளாட்சி உண்டாகட்டும்....!

அன்னாரின் பிரிவால் துயருறும்:
பாசையூர் **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(46597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைக் கண்டு பயப்படுவது யார்? ஜெயலலிதாவிடம் கருணாநிதி கேள்வி!



சென்னை,பெப்.7

தேர்தலைக் கண்டு அஞ்சி ஜெயலலிதா தினசரி ஓர் அறிவிப்பை விடுத்துவருகிறார். தேர்தல் பயம் எனக்கல்ல அவருக்குத்தான்

இப்படித் தெரிவித்தார் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி.

இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எதிர்க்கட்சிக் கூட்டணியை ஒரு கை பார்ப்பேன் என்று அறை கூவல் விடுத்து என்னை வம்புக்கு இழுத்திருக்கிறார்.

தேர்தல் அருகில் வந்துவிட்டது என்றவுடன் அரசு ஊழியர்களுக்கு சலுகைகளை வாரி வழங்கி சரணடைந்திருப்பது யார்?

கடந்த நான்காண்டு காலமாக வீதிப்பணியாளர்கள் போராட்டம் நடத்திய போதெல்லாம் அவர்களது கோரிக்கையை ஏற்காமல் தேர்தல் சமயத்தில் அவர்களுக்கு வேலை மீண்டும் அளிப்பதாக அறிவிப்பு வெளியிட்டது யார்?

அரச அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் மாநாடு நடத்த எத்தனை முறை திகதி கேட்டிருப்பார்கள். ஆனால், அப்போதெல்லாம் திகதி ஒதுக்காமல் தேர்தல் நெருங்கும் சமயத்தில் அவர்களது மாநாட்டில் பங்கேற்க திகதி கொடுத்தது யார்?



கூட்டணிக்காக கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று அறிக்கை விடுத்தது யார்?

கடந்த நான்கு மாதங்களாக அன்றாடம் ஓர் அறிவிப்பினை அதை நிறைவேற்ற முடியுமா? முடியாதா என்பதை பற்றியெல்லாம் கவலைப் படாமல் அறிவிப்பை முதல்வர் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

நான் முதல்வர் பதவிவகித்து அது போய்விடப் போகிறதே என்று எனக்குத் தேர்தல் பயம் வரப்போகிறதா?

அல்லது இது வரை நான் வகிக்காத பதவி கிடைக்காமல் போகிறதே என்பதற்காக பயம் வரப்போகிறதா?

கடந்த நான்கரை ஆண்டுகளாக தமிழக மக்களின் கோரிக்கைகளை ஏற்காமல் -மதிக்காமல் நடந்துகொண்டு விட்டோமே, அரசு அலுவலர்கள் கெஞ்சியபோதெல்லாம் காது கேட்காதவர் போல் இருந்து விட்டோமே என்னசெய்வது என்ற பயம் எனக்கு வரப்போகிறதா?

உண்மையில் தேர்தல் பயம் யாருக்கு என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு உணர்வர் - என்று கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

## கலாம் 'அனுபவித்த' பூகம்பம்



இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அமர்ந்திருந்த அந்த அறை திடீரென மேலும் கீழும் குலுங்கியது. பின்னர் பக்கவாட்டில் அசைந்து அதிர்ந்தது. ரிச்டர் அளவு மானி பெரும் பூகம்பம் ஏற்பட்டதைக் காட்டியது.

பயம் வேண்டாம். இது நிஜ பூகம்பம் அல்ல செயற்கை பூகம்பம்தான்.

பிலிப்பைன்ஸ் நாட்டுக்குச் சென்றுள்ள அப்துல் காலாம், அங்குள்ள எரிமலை மற்றும் பூகம்ப ஆராய்ச்சி நிலையத்தில் தான் இந்த செயற்கைப் பூகம்பத்தை அனுபவித்தார். விஞ்ஞானியான அப்துல் கலாமுக்கு இது ஒரு புதிய அனுபவம்.

அடிக்கடி எரிமலை வெடிப்பு, பூகம்பம் நிகழும் நாடு பிலிப்பைன்ஸ். அங்கு 52 எரிமலைகள் உள்ளன. அவற்றில் இப்போது நெருப்புக் கக்கிக் கொண்டிப்பவை 13 எரிமலைகள். (ஐ)

## பாபா அணுசக்தி மையத்தை தாக்கப்போவதாக எச்சரிக்கை

பெங்களூர்,பெப்.7

கோலார் அருகேயுள்ள பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் கடிதம் வந்தது. இதையடுத்து அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டம், கௌரிபிதனூரில் பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையம் உள்ளது. பெப்ரவரி 3ஆம் திகதி இந்த மைய அதிகாரிக்கு ஒரு கடிதம் வந்தது.

ஆந்திர மாநிலத்திலிருந்து வந்த இந்தக் கடிதத்தில் அணுகுண்டு ஆராய்ச்சி மையத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்போவதாக மிரட்டல் விடுத்து எழுதப்பட்டிருந்தது.

இதுகுறித்து உடனடியாக இந்த ஆராய்ச்சி மைய அதிகாரிகள் பொலீஸில் முறைப்பாடு செய்தனர். மேலும் பாதுகாப்பு அளிக்கும் படி கேட்டுக்கொண்டனர்.

வெடிகுண்டு மிரட்டலையடுத்து இந்த மையத்தில் துப்பறியும் மோப்பநாயுடன் தீவிர சோதனை நடத்தப்பட்டது. மேலும் வெடிகுண்டுநிபுணர்களும் வெடிகுண்டை கண்டு பிடிக்கும் கருவியுடன் சோதனை நடத்தினர்.

ஆனால், வெடிகுண்டு ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. என்றாலும் இந்த அலுவலகத்துக்குப் பலத்த பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. மேலும் அலுவலகத்தைச் சுற்றி தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ)

## ஈரானுக்கு எதிராக வாக்களித்தது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் வேண்டும்!

### இந்தியாவில் இடதுசாரிகள் கோரிக்கை

புதுடில்லி, பெப்.7

சர்வதேச அணுசக்தி நிறுவனக் கூட்டத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்தது குறித்து நாடாளுமன்றத்தில் முழு விவாதம் நடத்தவேண்டும் என்று இடதுசாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஏ.பி.பரதன் ஏ.ஐ.டி.யு.சி. பொதுச் செயலாளர் குருதாஸ், தாஸ்குப்தா ஆகியோர் செய்தியாளர்களுக்குக் கூட்டாக அளித்த பேட்டியில் கூறியதாவது:-



செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோது...

சர்வதேச அணுசக்திக் கூட்டத்தில் ஈரானுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து இந்தியா ஆதரித்துள்ளது வருத்தம் அளிக்கிறது. இது நமது சுதந்திரமான வெளியுறவுக் கொள்கைக்கு எதிராக அமைந்துவிட்டது.

ஈரான் அணுசக்தித் திட்டம் குறித்த அறிக்கையை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு சர்வதேச அணுசக்தி நிவனத்தின் தலைமைச் செயலர் முகமது எல் பராடி மார்ச்சில் அனுப்புகிறார்.

எனவே, அதற்கு முன்பாகவே வரவு - செலவுத் திட்ட கூட்டத் தொடரில் இந்த விவகாரம் குறித்து முழுமையாக விவாதித்து மார்ச் 6 ஆம் திகதி நடைபெறும் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் அடுத்த கூட்டத்தில் இந்தியாவின் நிலை குறித்த முடிவை எடுக்கவேண்டும்.

ஈரானுக்கு எதிராகத் தீர்மானம் நிவேற்றப்பட்டு ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் தற்போதைய சூழ்நிலையில் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஆகிவிட்டது.

ஈரானுக்கு எதிராக வாக்கு அளித்த விவகாரத்தில் ஒருமித்த கருத்து நாட்டில் நிலவவில்லை என்பதை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நினைவில் கொள்ளவேண்டும் - என்று தெரிவித்தார். (ஐ)

## விஜயகாந்த் வராததால் கலாட்டா செய்த ரசிகர்கள்

கரூர், பெப்.7

கரூரில் சில கிராமங்களை விஜயகாந்த் புறக்கணித்ததால் ஆத்திரமடைந்த ரசிகர்கள் சுவரொட்டிகள், பதாகைகளைக் கிழித்தெறிந்து ரகளையில் ஈடுபட்டனர்.

கரூர் மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாக, தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் பிரசாரம் மேற்கொண்டார். குளித்தலை, குமாரமங்கலம், கேட் அருகே தனது பிரசாரத்தை அவர் சனிக்கிழமை தொடங்கினார்.

வழியில் பல கிராமங்களில் அவர் பிரசாரம் செய்தார். அறிவிக்கப்படாத இடங்களிலும் கட்சியினர் மக்களைக் கூட்டியிருந்தனர். இதனால், ஆத்திரமடைந்த விஜயகாந்த், கட்சி நிர்வாகிகளைக் கடிந்து கொண்டார்.

இதேபோல, லாலாப்பேட்டை அருகே வேங்கம்பட்டி கிராமத்தில் விஜயகாந்த் பேசுவார் என ஏற்பாடு செய்திருந்தனர். அதை அவர் புறக்கணித்தார். இதனால் ஆத்திரமடைந்த கட்சியினர், விஜயகாந்த் பிரசார வாகனத்தின் பின்னால் வந்த தொண்டர்படையினரின் கார்மீது கல்வீசினர். இதில் காரின் 3பக்க கண்ணாடிகள் உடைந்தன. (ஐ)

# உமிக்கரி கொண்டு பல் துலக்காதீர்! மிளிரியில் அது பாதிப்பை ஏற்படுத்தும்

**தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினர் பெப்ரவரி மாதத்தை பற்சுகாதார விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனம் செய்துள்ளனர். முன்பள்ளி மாணவர் தொடக்கம் முதியோர் வரையில் பல் சுகாதாரம் பேணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் பல் சுத்தமாக்கும் முறைகள் தொடர்பாகவும் விளக்கும் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்தினரால் வெளியிடப்பட்ட செய்திக் கட்டுரை இது.**

ஒவ்வொரு மனிதனுக்கும் பற்கள் அத்தியாவசியமானதாகும். மனிதனுடைய நாளாந்த உணவுத் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளில் ஆரம்ப உணவுச் செயல்முறையில் பற்களின் செயற்பாடு முதன்மை பெறுகின்றது.

''பல்லுப் போனால் சொல்லுப் போகும்'' என்ற முதுமொழிக்கு அமைவாக ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பல், வாய் சுகாதாரத்தைப் பேணுவது அவசியமானதாகும். எனவே, கீழ்வரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பல், வாய்ச் சுகாதாரத்துடன் வாழ்வோம்.

* பல் துலக்குவதற்கு பற்தூரிகையையும் பற்பசையையும் மட்டும் பாவித்து காலை, இரவு உணவு உண்டபின் கட்டாயம் பல் துலக்குவோம். விறகுக் கரி, உமிக்கரி, பற்பொடி ஆகியனவற்றைப் பல் துலக்குவதற்குப் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.

* கைவிரல்களினால் பற்பொடி, உமிக்கரி, விறகுக் கரி ஆகியவற்றைப் பயன்படுத்தி பல்துலக்குவதால் பற்களின் மிளிரியைக் கீறி பற்பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, கைகளினால் இவற்றைப் பாவித்து பல் துலக்குவதைத் தவிர்ப்போம்

* பற்களைப் பாதிக்கக்கூடிய உணவுப் பதார்த்தங்கள், குடிபானங்கள் என்பனவற்றைப் பாவிப்பதைத் தவிர்த்து இவற்றுக்குப் பதிலாக பழவகைகள் உண்பதால் பற்சூத்தை ஏற்படாது பாதுகாப்போம்.

* பற்களினால் கடினமான பொருள்களைக் கடித்தல், மென்பானங்களின் மூடிகளைத் திறத்தல் போன்ற செயற்பாடுகள் செய்வதைத் தவிர்ப்போம்.

* வெற்றிலை போடுதல், புகைத்தல் மற்றும் மது அருந்துதல் போன்றவற்றால் பல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது. அத்துடன், வாய்ச்சுகாதாரத்தைப் பாதிப்பதுடன் வாய்ப் புற்றுநோய்க்கும் அத்திபாரமாக அமைவதால்

## பழ வகைகளை அதிகளவில் உண்பது பற்சூத்தை உருவாகுவதைத் தடுக்கும்

புகைத்தல், வெற்றிலைபோடுதல், மது அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்ப்போம்.

* குழந்தைகள், இளம்பராயத்தினர் ஆகியோருக்கு இனிப்பு, பிஸ்கற், கன்டோஸ், மென்பானம் ஆகியவற்றை அதிகமாகக் கொடுப்பதால் பற்பாதிப்பு ஏற்படுகின்றது. பற்பாதிப்பிற்கு தூண்டலான இவ்வுணவு வகைகளை மதிய உணவின் பின்னர் வழங்குவதன் ஊடாக பற்பாதிப்பில் இருந்து பாதுகாப்போம்.

* செயற்கை பல் கட்டியவர்கள், கிளிப் போட்டவர்கள் அ[illegible] உணவின் பின்னரும் அவற்றைக் கழற்றி உப்பு நீரினால் சுத்தம் செய்து பாவிப்பதன் ஊடாக பற்தொற்றுக்களில் இருந்து பாதுகாக்கலாம்.

* கடினமான நார்த்தன்மையான உணவு வகைகளை உண்டபின்னர் பல் ஈறுகளினுள் அடைந்த உணவுத்துணிக்கைகளை சுத்தம் செய்வதற்கு ஈர்க்கு, ஊசி முனை, விறகுச் சிராய் ஆகியனவற்றைப் பாவிப்பதை தவிர்ப்போம்.

* பற்பசைகளில் புளோரைட் அடங்கிய பற்பசைகளையும் பாவிக்கப்படும் பற்தூரிகைகள் நெழிவற்ற தூரிகை, தேய்வற்ற பற்தூரிகைகளையும் பாவிப்போம்.

* இனிப்புப் பானங்களை அருந்தியபின்னர், உணவு உண்டபின்னர் வாயை நீர் கொண்டு சுத்தம் செய்வோம்.

* பல் ஈறுகளுக்குள் அடைந்துள்ள உணவை பற்தூரிகையினால், பல் நூல்களினால் துப்புரவு செய்வதன் ஊடாக பல் ஈறுகளினுள் உள்ள மாச்சத்து நிறைந்த உணவு வகைகளை அகற்றி பற்சூத்தையிலிருந்து பாதுகாப்போம்.

### பல் சுத்தமாக்கும் முறைகள்

* முன் பற்களின் வெளிப்புறத்தை சுத்தமாக்கும் போது 45 பாகை சரிவில் பற்தூரிகையைப் பிடித்து சுழற்சி முறை மூலம் ஒவ்வொரு பற்களாக சுத்தமாக்கவேண்டும்.

* [illegible] வெளிப்புறத்தை முரசி[illegible] பற்தூரிகையை வெளி நோக்கி அசைத்து சுத்தமாக்கவேண்டும்.

* பின் பற்களின் உட்பக்கத்தை சுத்தமாக்கும் போது பற்தூரிகையை சாதாரண சரிவில் பிடித்து உள்ளிருந்து வெளிநோக்கிச் சுத்தமாக்கவேண்டும்.

* முன் பற்களின் உட்பக்கத்தை சுத்தமாக்கும்போது பற்தூரிகையினை நிலைக்குத்தாக பற்றிய வண்ணம் கீழிலிருந்து மேலாக நகர்த்தி சுத்தமாக்க வேண்டும்.

மெல்லும் பரப்புக்களை சுத்தமாக்கும் போது பற்றூரிகையினை கிடையாகப் பிடித்து முன் பின்னாக அசைத்து தேய்த்து சுத்தமாக்க வேண்டும்.

என்றைக்கும் பல் ஆரோக்கியத்துடன் வாழ மேற்படி பற்சுகாதார நடைமுறைகளையும், பல் சுத்தமாக்கும் முறைகளையும் கடைப்பிடித்துக்கொள்வதுடன் குழந்தைகளுக்கு , குழந்தைப் பருவத்திலேயே இவ்வாறான நடைமுறைகளைச் கடைப்பிக்க ஊக்குக்கவேண்டும். பல் ஆரோக்கிய மட்டத்தைப் பேண ஆறு மாதத்திற்கு ஒரு தடவையேனும் பல் வைத்தியரிடம் சென்று பல் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பற்களில் கறுப்புப் படிவு, பற்தேய்வு, பற்சூத்தை, முரசு வீங்கி, சிவந்து இரத்தக் கசிவு காணப்படல், பற்காறைகள், சிமெந்துப் படிவுகள், விபத்தின் பின் பல் உடைதல், பல்நோ காணப்படுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் உடனடியான பற்சிகிச்சை ஊடாக பல் ஆரோக்கியத்தைப் பேணமுடியும்.

அத்துடன், வாய்ப்புண், வாயினுள் கிருமித்தொற்று ஆகியன காணப்படின் உடனடியாக பல் வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்வதனூடாக எமது பல், வாய்ச் சுகாதாரத்தை பேணமுடியும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மூன்றுமாடி கட்டடத்தின் தளமட்டத்தில் கறையான் தடுப்பு வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் M8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிறிய கேள்விகள் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் இருந்து 20.02.2006 வரை செல்லுபடியான ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 15,000/=
2. மீளளிக்கப்படாத வைப்புத்தெகை ரூபா 500/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வேலையின் பெயரை உறையின் இடது மூலையில் குறிப்பிட்டு தலைவர், சிறுகேள்விகள் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குத் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவா ளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 27.02.2006 அன்று பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, உடனடியாக திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப்பத்திரங்கள் திறக்கும் பொழுது பிரசன்னமாயிருக்க முடியும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக்கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

தபால் பெட்டி இல. 57
திருநெல்வேலி
01.02.2006

**பதிவாளர்**
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி/47740)(11-17-42)

# கண்ணீர் அஞ்சலி

தாதிய உத்தியோகத்தராக யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும்
திருமதி கமலராணி சிவானந்தராசா அவர்களின் தாய்

**திருமதி புவனேஸ்வரி**

அவர்களின் மறைவையுற்று துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ்.அரசினர் வைத்தியசாலை
தாதியர் நலன் புரிச்சங்கம்.

(46505)(42-11-17)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**சபாபதி திருநாவுக்கரசு**

தோற்றம் 11-07-1937 மறைவு 23-01-2006

கடந்த 23.01.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சபாபதி திருநாவுக்கரசு அவர்களின் மறைவின் போது ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும், ஆறுதல் கூறியும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உற்றார்,உறவினர்,நண்பர்கள் அயலவர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டி குறிச்சி,
பண்டத்தரிப்பு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-47724)(18-11-17-42)

# மரண அறிவித்தல்

## திருமதி விறிசிற்றம்மா மரியநாயகம்



யாழ்ப்பாணம், 127, பாங்சால் வீதியை வதிவிடமாகக் கொண்ட திருமதி விறிசிற்றம்மா மரியநாயகம் 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அவுறான் பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பிரான்சிஸ் மரியநாயகத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் விஜயகுமாரி (மலேசியா), ஜெயானந்தகுமார் (கனடா), அருட்தந்தை M.M.V.அமிர்தகுமார் (கனடா), பத்மகுமாரி (பபா), றாஜகுமார் (கிளைமுகாமையாளர், யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பீலிக்ஸ் மற்றும் மங்களேஸ்வரி, அன்ரன்றோய், ஜான்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்னர், புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை M.M.V. அமிர்தகுமார்,
பபா, றாஜகுமார்.
(பிள்ளைகள்)

127, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(46508)(42.11.17)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியை
திருமதி பாலராணி சிறிதரன்
அவர்களின் அருமைத் தாய்

**வள்ளிப்பிள்ளை செல்லையா**

அவர்களின் மரணத்தால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம்

(46516)
(21-11-17-42)

## வரணி வித்தியாலயத்தில் இன்று பொன்விழா

தென்மராட்சி கிழக்கு,பெப்.7

வரணி மகாவித்தியாலய பொன்விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இன்றைய தினம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன், பாடசாலைப் பெயர் பொறித்த வளைவும் திறந்து வைக்கப்படும். இந்தப் பெயர் வளைவை பாடசாலையின் பழைய மாணவரான வரணி இயற்றாலையைச் சேர்ந்த எஸ்.உதயகுமார் 80 ஆயிரம் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-122-204)

## பாஷையூரில் வீதிப் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.7

பாஷையூர் சமூக அபிவிருத்திச் சபையினரால் மேற்கொள்ளப்படவுள்ள வீதிப் புனரமைப்பு வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணியளவில் சமூக அபிவிருத்திச் சபையின் தலைவர் எஸ்.பாலதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கினைப் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை இ.ஸ்ரோலின் அடிகளார், யூ.என்.கபிரட் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.இராசதுரை, யாழ்.மாநகர சபையின் பொறியியலாளர் எஸ்.சுரேஸ்குமார், பாஷையூர் கிராம சேவகர்களான எஸ்.யஸ்ரின், என்.நித்தியானந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து வேலைத் திட்டத்திற்கான பெயர்ப்பலகையினை யூ.என்.கபிரட் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ். இராசதுரை திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் பாஷையூர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், யூ.என்.கபிரட் நிறுவனத்தின் பொறியியளலார், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சமூக மேம்பாட்டு உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-190)

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

யாழ்ப்பாணம்,பெப்.7

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைப் பணம் வழங்கப்படவுள்ளது.

பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு இடையில் பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவில் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## நல்லூர் பிரதேச சபை வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-9 பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-
08.02.2006ஆம் திகதி தொடக்கம்
16.02.2006ஆம் திகதி பிற்பகல் 3மணி வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:
17.02.2006 நண்பகல் 12 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 17.02.2006 பிற்பகல் 2.30 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருக்கவேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை, *'செயலாளர், நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி'* என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' எனும் விலாசத்திற்கு 2ஆம் பந்தியில்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

| தொ இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்வி பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற் வரி |
|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் உப - அலுவலக கொல்களம் திருத்தம் | 5000.00 | 500.00 | 75.00 |
| 02 | கொக்குவில் பொதுச் சந்தையில் உள்ள கிணற்றுக்கு கைவிசை நீர் பம்ரி பொருத்துதல் (Hand Pump) | 150.00 | 500.00 | 75.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி
06.02.2006

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை

(சி- 47739)(21-11-17-42)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 6ஆம் ஆண்டு நினைவு

தோற்றம் 10 - 09 - 1975



மறைவு 07 - 02 - 2000

**செல்வன் இராசரத்தினப்பத்தர் சுகந்தன்**

என்றும் உம் நினைவுகளுடன் வாழ்கின்ற....

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

உடன்பிறப்புகள்.
(நேசம் அழகு நகை).

(46512)(42-11-17)

# மரண அறிவித்தல்

## அருளையா ரதசேகரம்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளையா ரதசேகரம் நேற்று (06.02.2006) திங்கட்கிழமை காலமானார்.



அன்னார் அமரர்களான அருளையா - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் கொட்டடியைச் சேர்ந்த சந்திரசேகரம் - கண்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பால தேவியின் அன்புக் கணவரும் மோகனலிங்கம், தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலராசா (லாலா)வின் அன்பு மாமனாரும் அபிராமி, சர்மிதா, அபர்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பக்தவற்சலம் (முன்னாள் முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி இலங்கை - லண்டன்), சுகு ணாவதி மற்றும் சரஸ்வதி (கொழும்பு), லோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் அம்பிகாபதி, விஜயலட்சுமி, தவராசா, சோமசேகரம், குமரகுரு ஆகியோ ரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்கடவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச.பாலதேவி (மனைவி)
தயாளினி (மகள்)
விமலராசா (லாலா - மருமகன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

(46511)(42-11-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சை மீண்டும் ஆரம்பிக்க வசதியாக வன்செயல்களைத் தடுத்து நிறுத்துங்கள்!

## ஜனாதிபதியிடம் யாழ். மனித நேய அமைப்புகள் கோரிக்கை

சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதியாக வடக்கு - கிழக்கில் இடம்பெறும் வன்செயல்களை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் கோரியுள்ளது யாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம்.

இதுவிடயமாக, மேற்படி ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில்:-

நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசுடனும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் நடத்திய நல்லெண்ணப் பேச்சு காரணமாகத் தடைப்பட்டிருந்த பேச்சுகளை ஜெனீவாவில் மீள ஆரம்பிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தற்பொழுது சில தீய சக்திகள் சமாதான பேச்சுகளை ''போர், போர்'' என்ற கோதாவில் குழப்புவதற்கு முன்னெடுத்திருக்கும் நடவடிக்கை குறித்து யாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் ஆழ்ந்த கவலையையும் அக்கறையையும் கொண்டுள்ளது.

சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுத்திருக்கும் இந்தவேளையில், மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிராந்தியத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அத்துடன், நிவாரணப் புனர்வாழ்வு மீள் கட்டுமான நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் பத்துப் பேர் கடத்தப்பட்டுள்ளதும் சமாதானப் பேச்சுகளுக்கு ஒரு பின்னடைவாக இருக்கப் போகின்றதோ என்ற ஐயமும் பயப்பீதியும் ஏற்பட்டிருக்கின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முரணாக் சில தீய சக்திகள் அரச கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருந்து அரச படையினரின் மறைமுக ஒத்தாசையுடன் சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என அறியக்கிடக்கிறது.

முப்படைகளின் பிரதான தளபதி என்ற வகையில் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மிக விநயமாகத் தங்களை வேண்டுவது யாதெனில், ''கண்ணுக்கு கண்'' என்ற போர் முறையைத் தவிர்ப்பதற்கு ஆக்கபூர்வமானதும் திடமானதுமான நடவடிக்கைகளை எடுத்து நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் உருவாக்கவேண்டும் - என்று அதில் உள்ளது. (எ)

# வளர்ப்பு நாய்களுக்கு நல்லூரில் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,பெப்.7

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

அதற்கமைய நாளைமறுதினம் புதன் கிழமை காலை 8.30 மணிமுதல் 9.30 மணி வரை இராமலிங்கம் வீதி, வாலையம்மன் கோவிலடி, செங்குந்த வீதி வீடுகளிலும் -

அன்றையதினம் 10 மணிதொடக்கம் 11.30 மணிவரை திருநெல்வேலி இளங் கலைஞர் மன்றத்திற்கு அருகிலும் சந்திர சேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலும் -

12 மணிமுதல் 1.30 மணிவரை பருத்தித் துறை வீதியுள்ள சனசமூக நிலையம், கலைமகள் வீதி சனசமூக நிலையம் ஆகியவற்றிலும், வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு மருந்து ஏற்றப்படும். (எ-204)

# பொதுஅறிவுப் போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்

வரணி பொது நூலகமும் நூலக அபிவிருத்தி சபையும் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய பேச்சு, பொது அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் அண்மையில் நடைபெற்றன.

வரணி நூலக மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி ம.வி. அதிபர் செ.சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினர்களாக இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி. அதிபர் தர்மலிங்கம், வரணி ம.வி. ஆசிரியர் செ.நவரட்ணசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-122)

# பாடசாலையில் ஏதாவது இழப்பு ஏற்படின் உடன் கோட்டத்துக்கு அறிவியுங்கள்!

## நல்லூர் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

குருநகர்,பெப்.7

பாடசாலையில் ஏதாவது இழப்புகள் ஏற்பட்டால் அதுபற்றி உடனடியாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அதிபர்கள் அறிவிக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம்.

நல்லூர்க் கோட்டக் கல்விப் பாடசாலை அதிபர்களின் மாதாந்தக் கலந்துரையாடல் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்தியபோதே கோட்டக் கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ளவேண்டும். இந்த வகுப்புகளில் ஆசிரியர்கள் கலந்து கொள்வதைச் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உறுதிசெய்துகொள்ளவேண்டும். பாடசாலைக் கடமைநேரம் ஆறு மணித்தியாலயங்களைக் கொண்டது. இடத்தைவிட்டு நீங்கும் அனுமதி விண்ணப்பம் இரண்டு பிரதிகளில் நிரப்பப்படவேண்டும். அதிபர், ஆசிரியர்கள் வரவு இடாப்புகளில் தமது இலக்கத்தைக் குறிப்பிட்டு தமது ஒப்பங்களை இடும் முறையைப் பின்பற்றவேண்டும் - என்றார். (எ-51)

# தவறவிட்ட 27 தேசிய அ.அட்டைகள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்

## நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்து

கிளிநொச்சி,பெப்.7

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 27 பேரின் தேசிய அடையாள அட்டைகள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள், அலுவலக நேரத்தில் சமுகமளித்துத் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி தேசிய அடையாள அட்டைகள், இடம்பெயர்ந்த மக்களால் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

அடையாள அட்டைக்குரியவர்களின் பெயர், விவரம் முறையே வருமாறு:-

வ.சிவராஜா (மாவிட்டபுரம், தெல்லிப்பழை), த.சசியுகன் (கம்மாலையடி, சண்டிலிப்பாய்), ம.றோசலின் (மத்திய கிழக்கு வீதி, குருநகர்), சி.கோணேஸ்வரன் (நெல்லியான், செம்பியன்பற்று, தாளையடி), சி.சுசீலா தேவி (நாயன்மார் திடல், தம்பலகாமம்) -

ஜெ.செல்வதி (கரைச்சைத்திடல், தம்பலகாமம்), சி.பரணீதரன் (சுன்னாகம் கிழக்கு), வ.குலவீரசிங்கம் (மாவடி ஒழுங்கை, ஓடக்கரை, பருத்தித்துறை), ப.உதயலக்சுமி (குமாரியோடை, சமரபாகு, வல்வெட்டித்துறை), க.ஜெயக்கொடி (அரியமான்கேணி, கிளிவெட்டி), து.றமியா (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்), இ.பாசமலர் (பிள்ளையார் கோயிலடி, ஊரங்குளை, குப்பிளான்) -


செ.நவரத்தினம் (வேல்வீதி,மயிலிட்டி,), சி.கந்தசாமி (நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்), இ.பத்மநாதன் (காமல் வீதி, இறக்கிளமேசன், குருநகர்), பூ.சோதீஸ்வரன் (ஊரெழு கிழக்கு), ம.சூசைப்பிள்ளை (கொக்கிளாய், முல்லைத்தீவு), ர.சித்திரா (சாந்திபுரம், சௌத்பார், மன்னார்), செ.உருத்திரலிங்கம் (சுன்னாகம் கிழக்கு) -

ம.ஜோபற்றசன் (நுணசை வீதி, மாதகல்), சே.கிருஸ்ணராசா (இணுவில் தெற்கு), சு.பாலசிங்கம் (சாத்தனாவத்தை, தெல்லிப்பழை), ப.சந்திரகுமாரன் (கோப்பாய் வீதி, வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம்), த.காந்திமதி (கட்டுக்குளம், திரியாய்), க.யோகச்சந்திரன் (பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை), தி.அந்தோனியாப்பிள்ளை (மாதகல் வலிகாமம், தென்மேற்கு), க.தயானந்தராசா (மதவடி ஒழுங்கை, அளவெட்டி தெற்கு). (எ)



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் இவ்வாண்டுக்கான தையல் மற்றும் மனையியல் பயிற்சிநெறி அண்மையில் வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.தியாகமூர்த்தி பயிற்சி நிலையத்தை நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)



யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினால் அண்மையில் கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்களுக்கு ஆன்மீக போதனை வழங்கப்பட்டது.

வித்தியாலயத்தின் 185 மாணவ, மாணவிகளை அழைத்து அவர்களுக்கு கல்வியின் நோக்கம், ஒழுக்கம் பெற்றோர், ஆசிரியர்களை மதித்தல் மற்றும் ஆன்மீகப் போதனைகளை விளக்கி அவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை (ஜ)

# புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமை ஏனைய மனிதநேய அமைப்புகளுக்கும் அச்சுறுத்தலே!

## சுட்டிக்காட்டுகிறது நீதி சமாதான ஆணைக்குழு

யாழ்ப்பாணம்,பெப்.7

தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமை ஏனைய மனிதநேய அமைப்புகளுக்கு பெரும் அச்சுறுத்தலே.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு.

இது விடயமாக மேற்படி ஆணைக்குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் :-

கிழக்கில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆளணியினரை உடனடியாக மீட்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கும்படி தங்களைக் கோருகிறோம்.

கண்டனத்துக்குரிய இக்குற்றத்தை எந்த நாகரிக சமுதாயத்தாலும் சகித்துக்கொள்ளமுடியாது. குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு முதன்முதலில் அரசையே சாரும். அந்தவகையில் கடத்தப்பட்டுள்ளவர்களை மீட்பதும் அரசின் பொறுப்பாகும்.

இந்த வன்செயல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏனைய அங்கத்தினருக்கும் அதைப்போன்ற மனிதாபிமான அமைப்புகளுக்கும் ஓர் அச்சுறுத்தலாகவுள்ளது.

கடத்தப்பட்டவர்களில் சிலர் முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி நிலையம் என்ற அமைப்பின் ஆளணியைச் சேர்ந்தவர்கள். இது தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் இயங்குகின்றது. யுனிசெவ்,போருட் ஆகிய நிறுவனங்களுடன் இவை இணைந்து செயற்படுகின்றன. இது இவற்றின் நம்பகத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

இன வேறுபாடின்றி இவை சமூகத்திற்கு ஆற்றி வரும் பாராட்டுக்குரிய சேவை பலரின் நன்மதிப்பையும் பெற்றுள்ளது.

ஆள் கடத்தல் என்ற கொடுஞ்செயல் செய்யப்பட்ட பொறுப்பற்ற தருணத்தையும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மின் வரவையடுத்து பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டதையடுத்து இது நடந்துள்ளது.

சமாதானத்திற்குச் சாதகமான சூழலை ஏற்படுத்த அனைவரும் கடமைப்பட்டுள்ள இந்த வேளையில் இச்செயல் சமாதான முயற்சிக்கு அச்சுறுத்தலாக அமைகிறது.

இது ஜெனீவா சந்திப்பைக் குழப்புவதற்குத் தருணம் பார்த்துச் செய்த செயல்போலவே தோன்றுகிறது.

எனவே, கடத்தப்பட்டோரை மீட்டு சமாதான முன்னெடுப்பைப் பாதுகாப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கும்படி தங்களைப் பணிவுடன் கோருகிறோம் - என்று அதில் உள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

hp Psc Q 110 ரக all - in - one (பிரிண்டர், ஸ்கானர், போட்டோ கொப்பியர்), காகிதாதிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: R. சதீஸ் 077 6915125, 0779773038. (46481)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.No. 077 6087896 (46379)

## தவறிவிட்டது

தியாகராசா விக்கினேஸ்வரன் என்பவருடைய கைப்பை லைசென்ஸுடன் 05.02.2006 இல் கல்வியங்காட்டிற்கும் புன்னாலைக் கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி.சாந்திகுமார், பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு என்னும் விலாசத்திற்கு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.No. 077 6242494 (46482)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப். 7

வண்ணை வேங்கடேசப் பெருமாள் கோயில் நவோத் திர சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது

ஸ்ரீ ரங்கநாதருக்கு விசேட பூசைகள் சங்காபிஷேகம் என்பன இடம்பெறும். (எ-204)

* * *

யாழ்ப்பாணம்,பெப். 7

உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் சப்பரத்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (எ-205)

* * *

யாழ்ப்பாணம்,பெப். 7

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் தைப்பூச உற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறும்.விசேட அபிஷேக பூசைகளுடன் விழா நிறைவடையும். (எ-12)

* * *

வலி வடக்கு, பெப்.7

மல்லாகம் தெல்லியம்பற்றை ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 31 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றது.

தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும் அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான எதிர்வரும் 10 ஆம் திகதி சங்காபிஷேகமும் அன்று அன்னதானமும் இடம்பெறவுள்ளது. (எ-86)

* * *

மானிப்பாய்,பெப். 7

மானிப்பாய் வடக்கு பெரியதம்பிரான் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் அபிஷேகம், அன்னதானம் என்பன இடம்பெறும். (எ-90)

## மோ.சைக்கிளில் வந்தவர்கள் மீது கைதடியில் தாக்குதல்; இருவர் காயம்!

குடத்தனை,பெப்.7

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை கைதடி விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் வைத்து வழிமறித்த சுமார் 7 பேரைக் கொண்ட குழு அடித்துப் படுகாயப்படுத்தியது.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தச்சனதோப்பைச் சேர்ந்தவர்களான நல்லையா சுகந்தன் (வயது 25), நடராசா கமலதாஸ் (வயது 24) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பயணித்த 'ஹீறோ கொண்டா' மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி, சங்கிலி ஆகியனவும் தங்களைத் தாக்கிய குழுவால் அபகரிக்கப்பட்டுள்ளன என அவர்கள் தெரிவித்தனர். (எ-78)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் கவனத்திற்கு!

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோர் இந்த ஆண்டுக்கான அனுமதியைப் உரியமுறையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம் என வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமை புரிவோர் வழமைபோல தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை கடமை புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம் என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார். (எ-11)

---


## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

தேநீர்ச்சாலை

**மீள்நிர்மாணம்**

**ஆளணி (மேசன், தொழிலாளர், மரவேலையாள்கள்) தேவைக்கு கேள்வி கோரல்**

மேற்படி வேலைக்கு ICTAD பதிவுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து தொழிலாளர் மட்டும் வழங்கலுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைப் பெற அதிபர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை என்ற முகவரியுடன் நேரில் தொடர்புகொள்ளுங்கள்.

காலை 9 - பிற்பகல் 3 மணிவரை 10.02.2006 இற்கு முன்பாக விண்ணப்பியுங்கள்.

தொலைபேசி - 021 - 2268292

பருத்தித்துறை
01.02.2006.

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றங்களின் நிதியம்.

(21.17.16) (46476)


## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் - முல்லைத்தீவு

வழ:இல:-525/05
தன்மை: விவாகரத்து

வேதாபரணம்- மயில்வண்ணன்,
*அம்பலவன் பொக்கணை,*
*முள்ளிவாய்க்கால்.*

*வழக்காளி*

மயில்வண்ணன் பிறேமா
மே:பா:க.லிங்கதாஸ்,
*அல்வாய் வடக்கு,*
*இன்பருட்டி பருத்தித்துறை.*

*எதிராளி*

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி இலக்க வழக்கானது வழக்காளியால் 2005ஆம் ஆண்டு 09ஆம் மாதம் 08 ஆம் நாள் எதிராளிக்கெதிராக விவாகரத்து கோரி தாக்கல் செய்யப்பட்டு எதிராளியானவர் வசித்து வரும் முகவரிக்கு அழைப்புக்கட்டளை அனுப்பிவைத்தும் எதிராளி சமுகம் அளிக்கத் தவறியதன் பொருட்டு இப்பகிரங்க அறிவித்தல் தரப்படுகின்றது.

எனவே, இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் எதிராளியோ அவரை சார்ந்தவர்களோ அன்றி அக்கறையுடையவர்களோ நீதிமன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்கத் தவறுமிடத்தில் வழக்கு ஒருமுகமாக விளங்கப்பட்டு தீர்வு காணப்படும் என இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

''மன்றின் கட்டளைப்படி''

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு.

வரைபு:
திருமதி நா.மோகனராணி,
சட்டவாளர்,
சூட்டி வீதி,
முதலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

(சி-47730)(21.17.16)

## கண்ணீர் அஞ்சலி

### *கந்தையா கிருஷ்ணானந்தம்*

(வருமானப் பரிசோதகர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை)

*நாம் துயருறும் வேளை தன் இசையால் வசமாக்கி எம்மோடு பல்லாண்டு காலம் பணியாற்றி எம்மை விட்டுப் பிரிந்த சோதரனே! உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது.*

(46391)(21.17.16)

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

*தோற்றம்*
26 . 05 . 1947



*மறைவு*
19 . 01 . 2006

### அமரர் ஆறுமுகம் கதிர்காமநாதன் (ராசு)

*18.01.2006 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல வழிகளிலும் உதவிகள் செய்த எமது அயல்வாழ்மக்கள், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

சடையாளி,
காரைநகர்.

(46458)(21.17.16)

மனைவி, தமயன், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிகள்,
பேரமக்கள்.

---


## MCS
324, Palaly Road, Jaffna. (Near "Alady" Junction)



**Speed Batches**

- MS Office
- GIT (A/L Students)
- Visual Basic, VB Net
- Accounting Package
- Auto CAD
- Hardware Workshop
- Internet & E-mail Workshop
- CorelDraw, PageMaker, Photoshop, Typesetting
- Cool 3D, Flash, Premiere, HTML, Photoshop

வெளிநாடுகளில் அதிஉயர் வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும் Microsoft, CISCO, ComTIA, Sun Micro System நிறுவனங்களின் நேரடி சான்றிதழ்கள்.

- ComTIA A+ Hardware Technician
- ComTIA Network Professional
- Microsoft Certified Professional
- Microsoft Certified System Engineer
- CISCO Certified Network Admin.
- Sun Certified Java Programmer

பதிவுகள் 11.02.2006ற்கு முன் நேரில்

*****Supported by UNDP/JRRP*****


சிவமயம்



### சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம் (சோலை அம்மன்)

*சம்புரோக்ஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ*

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**பார்த்திப வருடம் தைத்திங்கள் 28ஆம் நாள் 10.02.2006 வெள்ளிக்கிழமை காலை 7.20-8.50 மணி**

*மெய்யடியார்களே!*

இந்து சமுத்திரத்தின் நித்திலமெனப் போற்றப்படும் ஈழத்திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் கமழும் சாவகச்சேரிப் பகுதியில் மூர்த்தி, கீர்த்தி, தீர்த்தம், தலம், தலவிருட்சம் இத்தியாதி தனிச் சிறப்புகளுடன் திகழ்வதும் தல விருட்சமான மகிழம் மற்றும் பாதிரி, கொன்றை, குரவம், தரபுன்னை முதலாம் கோட்டுப் பூக்கள் நிறைந்த இலஞ்சியாரணியம் என்னும் திவ்விய சோலையில் வானரங்களினதும், புள்ளினங்களினதும் மகிழ்ச்சி ஆரவாரங்களிடையே வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஆதி சக்தியாம், அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் -

நிகழும், மங்களகரமான பார்த்திப வருடம் தைத்திங்கள் 28ஆம் நாள் (10.02.2006) வெள்ளிக்கிழமையும், சித்தயோகமும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய காலை 7.20மணி முதல் 8.50 மணிவரையுள்ள கும்பலக்கின சுபவேளையில் சம்புரோக்ஷண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கிட்டியுள்ளது. அன்றும் அதற்கும் முன்பும் நடைபெறும் கிரியைகளில் அடியார்கள் ஆசார சீலர்களாகக் கலந்துகொண்டு வழிபட்டுத் திருத்தொண்டுகள் புரிந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக!

சிவாகம பூர்வமான கிரியா நிகழ்வுகள்

**பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்**

தைத்திங்கள் 27ஆம் நாள் (09.02.2006) வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை.

**மஹாகும்பாபிஷேகம்**

*பார்த்திப வருடம் தைத்திங்கள் 28ஆம் நாள் 10-02-2006 வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிமுதல் 8.50 மணிவரை*

'கும்பாபிஷேக பிரதமகுரு'

சோதிடர் **சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள்**
(தலைவர், அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை)

ஆசியுரை: வேதாகம சோதிடபூஷணம், கலாபூஷணம்
சிவஸ்ரீ **சி.சிதம்பரநாதக் குருக்கள்,**
**சிவஸ்ரீ த.வீரபத்திரக் குருக்கள்,**
(பிரதமகுரு, முத்துமாரி அம்மன் கோயில், சாவகச்சேரி),
நல்லை ஆதீன முதல்வர் **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்** - ஆகியோர்

ஆலயப் பிரதம குரு **சிவஸ்ரீ கி.தனபதிக் குருக்கள்**

கும்பாபிஷேகத்திற்குத் தேவையான திரவியங்களை ஆலய பிரதம குருக்களிடம் வழங்கி அன்னையின் திருவருளைப் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீர்களாக. மஹாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகத்தில் பங்குகொள்வோர் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை தேவஸ்தானத்தில் மேற்கொள்ளவும்.

மண்டுவில்,
சாவகச்சேரி.

**கும்பாபிஷேக புனருத்தாரண சபையினரும் அடியார்களும்.**

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் பரமேஸ்வரி



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (06.02.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான ஐயாத்துரை-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், தாவடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும் அமரர் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும் செல்வராணி (இளைப்பாறிய ஆசிரியை), பாலச்சந்திரன் (இளைப்பாறிய படவரைஞர், 66, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13, பிரபல புகையிலை வியாபார நிலையம்), அமரர் சிவச்சந்திரன் (சிவநேசன்), சிவராணி (தயா) ஆகியோரின் அன்புத் தாயும் கணபதிப்பிள்ளை (மட்டுவில் - இளைப்பாறிய அரச ஊழியர்), விமலாதேவி (செல்வம்), விஜயகுமாரி (ஜேர்மனி), தனேந்திரன் (யாழ் பல்கலைக் கழகம்), கலைமதி (வெளிவாரிக் கல்லூரி), கிருபாகரன் (கொழும்பு இந்துக் கல்லூரி), சியாமினி (ஜேர்மனி), துரைராஜன் (பார்த்தீபன், கொக்குவில் இந்துக் கல்லூரி), சிவபரன் (யாழ். பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும் அமரர் களான கணபதிப்பிள்ளை, சேனாதிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(46497)

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
T.P 0712577024

தகவல்,
**செ.பாலச்சந்திரன்.**
*(மகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்காலில் நவீன உலகின் திறவுகோல்
## PJ இன்ரநெற் க(F)பே

(50/= Per Hr&High Speed Browsing)

காலை 8.00 மணி - மாலை 7.00 மணி வரை

மற்றும்

* சிறுவர்களிற்கான GAMES (புதியவை)
* Printing
* Typing
* Designing
* பெண்களுக்கு பிரத்தியேக இடம்

மிக விரைவில் Net to Phone மற்றும்
சர்வதேச தரச் சான்றிதழ்களுடன் கணனிக் கற்கைநெறிகள்

தொடர்பிற்கு: - 0776 172740
ஆவரங்கால் சந்தி,
ஆவரங்கால்.

*உங்கள் அறிவுடன் PJ...*

(சி-47748) (54-34-15)


கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
பதிவு இலக்கம்: ஜே/1572 பதிவு திகதி: 01.03.1972

## பதவி வெற்றிடம்

01. பதவி : கணக்குப் பதிவாளர்
02. குறியீட்டு இல. : 301/13
03. சம்பள அளவுத்திட்டம் : 4000 - 5550 / 75 x 10 - 80 x 10

அத்துடன் சங்கம் வழங்கும் இதர படிகள் 1250 + 2500 = 3750/=

04. பதவி எண்ணிக்கை : 01
05. கல்வித் தகைமை : கூட்டுறவுப்பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் பதவியில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
அல்லது
க.பொ. த. (சா /தரம்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம் /தூயகணிதம்/வர்த்தககணிதம், சிங்களம் அல்லது தமிழ் என்பன வற்றை உள்ளடக்கியதாக ஐந்து திறமைச்சித்திகளுடன் மொத்தம் ஆறுபாடங்களுடன் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் லிகிதர் பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்
06. வயது: விண்ணப்பமுடிவுத் திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தாங்கள் கடமை புரியும் கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
07. சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
08. சங்கம் கோரும் பிணைப்பணத்தை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும்.
09. விண்ணப்ப முடிவு திகதி: 23.02.2006
விண்ணப்பங்கள் யாவும் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

பொதுமுகாமையாளர்,
கோண்டாவில் ப.தெ. வ. அ.கூ.சங்கம்,
கே.கே.எஸ். றோட், தாவடிச்சந்தி, கோண்டாவில்.

(சி-47742) (54-34-15)

எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் மேல்பக்க இடது மூலையில் "கணக்குப் பதிவாளர், குறியீட்டு இல. 301/13 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
இப்பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்கத்தேவையில்லை.


*Study in Singapore*

FTMS Global

சிங்கப்பூரில் உயர்கல்வி மற்றும் பகுதி நேர வேலை வாய்ப்பு.



15 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி

Qulalification - G.C.E O/L , G.C.E A/L

Courses :- Business
Engineering & Computing Sciences
Chartered Accountants (ACCA)
English

தங்குமிட வசதியுடன்.

* Certificate Courses
* Diploma Courses
* Higher Diploma Courses
* Degree Courses

SCHOOL ADDRESS:
182 clemenceauavenue
#03-00
singapore 239923
tel: +6567332888
fax: +6563391060
web: www.ftmsglobal.com

Contact :- 0776242464
Wakesan.
ACCA Student, College of FTC, Singapore.
Meesalai North, Kodikamam



## கடைகள் வாடகைக்கு உண்டு

அச்சுவேலி, சந்நிதி கோயில் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தில், கீழ்த் தளத்தில் உள்ள நான்கு கடைகள் (பஸ்நிலையத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்தில்) வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு:
திருமதி க.கண்மணி
மாவடி வளவு, பத்தமேனி,
அச்சுவேலி. 0602212246

(சி-47746) (54-34-15)



## நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு



அல்டிமேட் அஜித், லைலா
மற்றும் பலர் நடித்த
**பரமசிவன்**
காட்சி நேரம்:
10.30, 2.30

## ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
**சரவணா**
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

## நாகம்ஸ் சுன்னாகம்



சூர்யா, திரிஷா,
வடிவேல் நடித்த
**ஆறு**
தினசரி:
புதியநேரம் 11.00, 3.00


## பட்டப்பின் படிப்புகள் பீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பட்டப்பின் குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி - 2004/05 மீள் பரீட்சை

மேற்படி கற்கைநெறியினைப் பூர்த்தி செய்யத் தவறியவர்களுக்கான மீள் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்கள் பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னராகப் பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகளுக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

(சி-47745) (54-34-15)

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### இலவச சீருடைத்துணி விநியோகம்

தென்மராட்சி,பெப்.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் நேற்று முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வழங்கப்பட்டுவருகிறது.

பாடசாலை அதிபர்கள் தமது பதவி இறப்பர் முத்திரையுடன் வருகைதந்து தமது பாடசாலைக்குத் தேவையான சீருடைத் துணிகளைப் பெற்று மாணவர்களுக்கு விநியோகிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (த-117)


SHAMROCK
J/Eachchamoddai Road.
* A/L 2008, 07 & 06
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
* A/L ஆங்கிலம்
* Gr.1 முதல் O/L வரை
* English med.6,7
* புலமைப்பரிசில் - 5 (வாராந்த பரீட்சைகளுடன்)


## துயர் பகிர்கிறோம்

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வித்தியாலயத்தின்
ஆசிரியர் திரு.செ.இராமநாதன்
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி செல்லையா வள்ளிப்பிள்ளை

அவர்கள் 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலமாகியதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தொண்டைமானாறு வீ.ம.வி.,
தொண்டைமானாறு.
(சி-47749) (54-34-15)

பாடசாலை உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் நவரத்தினசிங்கம்



(ஓய்வுபெற்ற முதன்மை எழுதுநர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நவரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (06.02.2006) திங்கட்கிழமை இறையடி நண்ணினார்.

அன்னார் அமரர்களான நாகலிங்கம் (மலாயன் பென்சனர்)- பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், இளையதம்பி (முன்னாள் ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி)- காந்திமதி தம்பதியரின் மருமகனும் பராசக்தியின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும் கௌரீசன் (லண்டன்), லலிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வற்சலாவின் (லண்டன்), அன்பு மாமனும் ஜெகசோதி, இராஜசிங்கம் (அமரர்), நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, சந்திரமௌலீசன் (அமரர்), யோகீஸ்வரன் (அமரர்) கங்கமௌலீசன், நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் லலீசனின் (ஆசிரியர்), மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை, 591, காலி வீதி, மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (08.02.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த. முகவரி: 160/2,
W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை.
தொ. பே.: 011-2365141
(46520) (54-34-15)

தகவல்:
குடும்பத்தினர்.

### சிவக்கொழுந்து இராசரத்தினம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து இராசரத்தினம் அவர்கள் 06.02.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பொன்னம்பலம் - அழகமுத்து தம்பதியரின் மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் வசந்தராணி, வதனி, வரதன், வசந்தன், வனிதா ஆகியோரின் தந்தையும் கதிர்காமநாதன், நடராஜா, நளினி, சந்திரகுலராஜா, தங்கராஜா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற மயில்வாகனம், காலஞ்சென்ற சபாரத்தினம், நவரத்தினம், அன்னலிங்கம், விஸ்வலிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஊரெழுவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொக்கனை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.
(46515) (54-34-15)

தகவல்:
வரதன் (மகன்).

### திருமதி சிற்றம்பலம் இரத்தினபாக்கியம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் இரத்தினபாக்கியம் 05.02.2006 ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் இறைவனடி எய்தினார்.

அன்னார் கார்த்திகேசு சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும் வாகீஸ்வரன் (சுவிஸ்), வரதராணி, லீலாவதி, வாகீஸ்வரி, வரதராஜன் (சுவிஸ்), வசுமதிதேவி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளஞ் சுடலைக்கு எடுத்துச் செல்லப்படும். என்பதனை அறியத்தருகின்றோம்.

ஞானசம்பந்தர் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
(46523) (54-34-15)

தகவல்:
சிற்றம்பலம் குடும்பத்தினர்.

### திருமதி தங்கம்மா தியாகராசா



(இளைப்பாறிய ஆசிரியை)

மறவன்புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபுரம் கிளிநொச்சியை வதிவிடமாவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி. தங்கம்மா தியாகராசா அவர்கள் நேற்று (06.02.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி- செல்லாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், மாரிமுத்து, கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் மற்றும் வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் தற்காலிக முகவரியான கைதடி தெற்கில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.மு.: மறவன்புலோ,
சாவகச்சேரி.
(46519) (54-34-15)

த.மு.: கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
க.குகாநந்தன் (குகா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 4ஆம் ஆண்டு நிறைவில் பேச்சு

கொழும்பு, பெப். 7

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஜெனீவாப் பேச்சுகள், இரு தரப்புகளுக்கும் இடையில யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி நான்காவது ஆண்டு நிறைவுதினத்தில் இடம்பெற விருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்தானது. ஜெனீவாப் பேச்சுகள் சரியாக நான்கு ஆண்டுகள் கழித்து 2006 பெப்ரவரி 22ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

ஜனாதிபதி சந்திரிகா அதிகாரத்தில் இருந்த போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசின் சார்பில் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

அந்த ஒப்பந்தத்தின் கீழான போர் நிறுத்தம் பல இழுபறிகளுக்குப் பின்னரும் இன்னமும் தாக்குப்பிடிக்கின்றது. ஆனால், அப்போது ஆட்சியிலிருந்த ஜனாதிபதியும் பிரதமரும் இப்போது அதிகாரத்தில் இல்லை. இலங்கை அரசுத்தரப்பில் அதிகாரத்தில் இருந்தோர் மாறிவிட்டனர். ஆனால், புலிகள் தரப்பு மாறாமல் அதே நிலையில் பேச்சு மீள ஆரம்பிக்கும் விடயத்தில் பங்குகொள்கின்றது.

அனுசரணைத் தரப்பைப் பொறுத்தவரை முன்னர் நோர்வேயின் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பிலிருந்த அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் அமைச்சர் பதவியை இழந்துவிட்டார். எனினும், அனுசரணைக்குழுவின் பிரதி நிதியாக அவர் மீண்டும் அக்குழுவில் இடம்பெறுகிறார். முன்னர் அனுசரணைக் குழுவின் ஒரு சாதாரண பிரதிநிதியாகக் கலந்து கொண்ட எரிக் சொல்ஹெய்ம் இப்போது அனுசரணைத் தரப்பின் பொறுப்பாளராக - அமைச்சர் பதவியோடு - இவ்விடயத்தைக் கையாளுகின்றார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி நான்கு வருடம் பூர்த்தியாகிய நிலையில், யுத்தம் நிறுத்தப்பட்டதைத் தவிர, அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான பயன் ஏதும் கிடைக்காத கட்டத்தில் - மீண்டும் தொடக்கத்தில் இருந்து ஒரு சமாதான முயற்சியில் ஈடுபடும் கட்டத்தில் - இவ்விடயத்தைத் தமிழர் தரப்பு எதிர்கொள்ள வேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வந்துள்ளது. இந்தத் தலையீடு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றே தவிர, விபரீதத்தை ஏற்படுத்தக் கூடியதல்ல."

- இவ்வாறு கூறினார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி ஜே. லன்ஸ்டெட்.

நேற்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'இலங்கையின் எதிர்காலமும் சமஷ்டி எண்ணக் கருவும்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாகப் பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. அவ்வாறானவற்றிற்குள்தான் சமஷ்டி மற்றும் ஒற்றையாட்சிபோன்ற தீர்வுமுறைமைகள் அடங்குகின்றன.

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை சமஷ்டிமுறை மூலம் பெறப்படும் தீர்வே சரியானதாகவும் நிலையானதாகவும் அமையும். இலங்கை மக்களிடையே சமஷ்டிமுறைமை பற்றிய ஓர்அரச உணர்வு உண்டு.

சமஷ்டி என்றால் அது நாட்டைப் பிரிக்கும் ஒருவழியே என இலங்கை மக்கள் எண்ணியுள்ளனர். அது அப்படியானதொன்றல்ல என்ற உண்மையை இலங்கை மக்களுக்கு சரியான முறையில் விளக்கக்காட்டவேண்டும்.

சமஷ்டி பற்றி கல்விமான்கள் மாத்திரம் பேசிக்கொள்கிறார்களளே தவிர, அதைச் சரியான முறையில் மக்களுக்கு விளக்கமளிக்க முன்வருவதாகத் தெரியவில்லை. அதன் காரணமாக சமஷ்டி என்றதும் இலங்கையர்கள் பயப்படுகின்றனர்.

இந்த அச்சநிலையைப் போக்கி, சமஷ்டி பற்றிய தெளிவை ஏற்படுத்த மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் முன்வந்திருப்பதையிட்டும் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இதற்கு அமெரிக்கக் குழு ஒத்துழைப்பு வழங்கும்.

அதேபோல், மிகவிரைவில் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுவிடவேண்டும் என்பதற்காக அமெரிக்கக் குழு ஆதரவையும் இலங்கைக்கு வழங்கத் தயாரகவுள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு சமஷ்டி முறைதான் சிறந்ததீர்வு என்றாலும்கூட, அம்முறைமை மூலம்தான் இலங்கைப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று அமெரிக்கா இலங்கைக்கு அழுத்தங் கொடுக்கவோ அல்லது நிபந்தனைகளை விதிக்கவோ மாட்டாது.

இலங்கை அரசு விரும்புகிற முறைமையைப் பயன்படுத்தி தீர்வைப் பெறலாம். எந்த முறையை அரசு பின்பற்றினாலும், சமாதானம் வரவேண்டும் அற்ற அடிப்படையில் அமெரிக்கா இலங்கைக்கு உதவும்.

-இவ்வாறு அவர் கூறினார்.

(க)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகம் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரியிடம் கோரியிருந்தது.

இதனையடுத்தே இராணுவப் பொலீஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

யாழ். நாக விகாரையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த விசாரணைகள் இடம்பெற்றன. அப்போது முறைப்பாட்டாளர்களில் 15 பேர் நேரில் சமூகமளித்து வாக்குமூலமளித்தனர்.

இந்த விசாரணைக்கு சமூகமளிக்கும்படி முறைப்பாட்டாளர்கள் 23பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் -நேற்று விசாரணைக்கு சமூகமளிக்கமுடியாதவர்களுக்கு பிறிதொரு திகதி வழங்கப் படுமென்றும் - ஆனாலும்விரும்பாதவர்கள் விசாரணைக்கு சமூகமளிக்க வேண்டியதில்லையென்றும் - ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ரோகித பிரியதர்சன தெரிவித்தார். (ஒ-7-86)

## திருமலைத் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப் போவதில்லையென்று வர்த்தகர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.

நேற்று முன்தினம் ஏகாம்பரம் வீதியிலுள்ள வெஸ்கோ நகை மாளிகையைச் சேர்ந்த இரு முஸ்லிம் வர்த்தகர்களைச் சிங்களக் காடையர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கியிருக்கின்றனர். பொல்லுகள், தடிகள் சகிதம் வந்திருந்த சுமார் 15 பேரைக்கொண்ட இந்தக் காடையர்கள் குழு, நாளை (அதாவது நேற்று) கடைகளை திறக்கக் கூடாது என்று கூறியே தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

இதேபோல், மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரும் தாக்குதலுக்கு உள்ளானார் எனத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதல்களை கண்டித்தும், எதிர்ப்புத் தெரிவித்துமே நேற்றைய ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. (க)


தமிழும் சிங்களமும் ஒரே அமைப்புடையவை சிங்களம் கதைப்பது மிகவும் இலகுவானது அரச வேலைகளில் இருமொழிக்கு தனியிடம்

இலவச சிங்கள வகுப்பும் பயிற்சி நெறியும் சான்றிதழும்

காலம்: 11.02.2006

(46363) விபரம்: புதன்கிழமை உதயனில் (25-49-12)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. ஆங்கிலம் : பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர், இளைஞர்கள் மற்றும் வீட்டுப்பெண்களுக்கானது. காலம் : 3 மாதங்கள்

2. சிங்களம் : அன்றாட வசனங்களைக்கொண்டு முழுமையாக கதைப்பதற்கான பாடநெறி. காலம் : 2 மாதங்கள்

கட்டணம் ரூபா 3000/-

சிறப்புச்சலுகை முடிவு

இன்று பதிவுசெய்வோருக்கு 4000/- இற்கான ஆங்கில, சிங்கள, புத்தகங்கள், CD இலவசம்

SAAMSTECH

233/4, Kasthuriar Road, Jaffna


## பேச்சுவார்த்தைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி 22 - 23ஆம் திகதிகளில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுகளுக்கு நோர்வே அனுசரணை வழங்கும்.

இலங்கையில் பிணக்கோடு தொடர்புபட்ட தரப்புகளான இலங்கை அரசும் புலிகளும் பெப்ரவரி 22 - 23இல் ஜெனிவாவில் நடைபெறும் பேச்சுகளுக்கு அனுசரணை வழங்கும்படி நோர்வேயை கேட்டுள்ளன.

2002 பெப்ரவரி 22 ஆம் திகதி கையெழுத்தான யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்தை எப்படி மேம்படச்செய்யலாம் என்பது பற்றி இருதரப்பினரும் கலந்துரையாடுவர்.

மூன்றாண்டு காலத்தில் இத்தகைய உயர் மட்டத்தில் இரு தரப்பினரும் நேருக்கு நேர் சந்திப்பது இதுவே முதல்தடவையாகும்.

''மோசமடைந்திருக்கும் பாதுகாப்பு நிலைமையை எவ்வாறு சீர்செய்வது என்பது குறித்து உயர்மட்டத்தில் கலந்துரையாட தரப்புகள் இணங்கியிருப்பது மிகச்சாதகமான அம்சமாகும்'' - என்கிறார் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம்.

''நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் யுத்த நிறுத்தத்தை அதிலிருந்து விடுவிப்பதற்கான யதார்த்த பூர்வமான தீர்வை தரப்புகள் எட்டுவதற்கு அனுசரணையாளர் என்ற முறையில் நோர்வே தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்''.

''அமைதி முயற்சிகளை மீண்டும் சாதகமான தடத்துக்கு கொண்டுவரும் திசையில் ஒரு சிறிய - ஆனால் குறிப்பிடத்தக்க - அடியை தரப்புகள் முன்னெடுத்து வைக்கின்றன. அத்தோடு பேச்சுகள் கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்''. - என்றார் சொல்ஹெய்ம்.

நோர்வேப் பிரதிநிதிகள் குழுவுக்கு சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் தலைமை வகிப்பார். அக்குழுவில் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும், விடார் ஹெல்கிசனும் இடம்பெறுவர். இலங்கை கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்டும் பிரசன்னமாகியிருப்பார்.

''அமைதி முயற்சிகளுக்கு எப்போதும் சுவிற்ஸர்லாந்து அளித்துவரும் மிகுந்த ஆதரவுப் போக்குக் காரணமாகவே சந்திப்புக்கு ஜெனீவாவை தரப்புகள் தெரிவுசெய்தன'' - என்று மேலும் தெரிவித்தார் அமைச்சர் சொல்ஹெய்ம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

## வேட்புமனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த பின்னரே தேர்தலை ஒத்திவைக்க முடியும் என்ற நிலை உள்ளதால் தமிழ்த் தேசியப் பற்றாளர்களை உள்ளடக்கிய பட்டியலைத் தயாராக வைத்துக்கொண்டு 'டம்மி' வேட்பாளர்களைக் கொண்டு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான சாத்தியங்கள் குறித்து தமிழர் தரப்பு ஆராய்ந்து வருகிறது.

இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஈ.பி.டி.பியும் தயாராகியுள்ளது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடவதற்கு ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய கட்சிகள் எதுவும் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான விண்ணப்பங்களை நேற்றுவரை பெற்றுக் கொள்ளவில்லை. (ஐ-8)


சாவகச்சேரியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

கணனி - Ms office

கணனி - சிறுவர்களுக்கானது

ஆங்கில வகுப்பு - சகல தரத்தினருக்கும்

ஆங்கில இலக்கியம் - (O/L பரீட்சைக்குரியது)

(English Literature)

பதிவுகள் தினசரி - மு.ப. 9 மணிமுதல் 11 மணிவரை

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம்

நவீன சந்தை - மேல்மாடி, சாவகச்சேரி.

(46510) (25-49-12)

பரீட்சை

உங்கள் பிள்ளைகள் 2006 வகுப்பில் பிரகாசிக்க வேண்டுமா!

உங்கள் பிள்ளைகள் எந்த நிலையில் உள்ளனர்!!

இவ்வருடத்தில் முதலாவது பரீட்சை வினாத்தாளைக் கொடுத்துப் பாருங்கள்!

தரம்:4.5.6.7.8.9.10.11

வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலையில்!!

வெள்ளி பி.பகல் 4 மணிக்கு பெறலாம்.

இது ஓர் வெல்லவதுஉ... வெளியீடு


## ஜெனீவாப் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு உதவியாக அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் -

அமைச்சர் எரிக் சொல்ஹெய்முக்கு உதவியாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் அதிகாரியான சொல் பிறைட் அம்மையாரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சுகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவுக்கான ஏற்பாடுகள், போக்குவரத்து ஒழுங்குகள், செலவுகள், தங்குமிட வசதிகள் போன்றவை அனைத்தையும் முன்னைய பேச்சுகளின்போது மேற்கொண்டமை போல - வழமை மாதிரி - இம்முறையும் நோர்வேத் தரப்பே மேற்கொள்ளும் என்ற விவரமும் மதியுரைஞர் பாலசிங்கத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக அறியவந்தது. இலங்கையின் புதிய அரசின் இணக்கத்துடனேயே இந்த ஏற்பாடுகளை நோர்வே மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெலிகந்தையில் கடத்தப்பட்டுள்ள புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் ஏழுபேரையும் விடுவிப்பதற்கு உண்மையான - நேர்மையான - ஆக்கபூர்வமான - நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கவேண்டும் என்ற புலிகளின் தலைமையின் எதிர்பார்ப்பை இலங்கை அரசுத் தலைமைக்குத் தெரிவிக்கும்படியும், நேற்றைய சந்திப்பின்போது எரிக் சொல்ஹெய்மிடம் மதியுரைஞர் பாலா தெரிவித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

இவ்வாறு ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு அந்த ஏழுபேரையும் விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமானால், ஜெனீவாவில் நடைபெறும் சமாதானப் பேச்சுகளுக்கான நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை அது ஏற்படுத்தித் தருவதாக அமையும் என்பதை இலங்கை அரசுக்குச் சுட்டிக்காட்டும்படியும் பாலசிங்கம் எரிக்சொல்ஹெய்மிடம் தெரிவித்தார் என அறியவந்தது. (க)

## கூட்டுப் பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனோ, மலையக மக்கள் முன்னணியுடனோ இணைந்து போட்டியிட லாமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும், தேர்தலுக்கு முன்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணைந்து கொண்டு, ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டாலும் ஆச்சரியப் படுதவற்கில்லையென விடயமறிந்த வட்டாரங் கள் கூறின.

தேர்தலில் இ.தொ.காவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது தொடர்பிலான பேச்சுகள் நடந்துவருவதாகவும், அதன் பின்னரே இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்படு மெனவும் மலையக மக்கள் முன்னணி வட்டாரங்கள் கூறின.

## வாழைச்சேனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி இளைஞர் கடத்தப்பட்டமைக்கும் தமக்கும் எதுவித தொடர்புகளும் இல்லையென்று விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர். (க)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா மகேஸ்வரி



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் விக்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரி நேற்று (06.02.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் (ஆச்சாரியார்) அன்பு மனைவியும், ஜெகநாதன், காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் நகுலராஜா (காந்தி) ஆகியோரின் அன்புத் தாயும் தவமணி, சதாசிவம், சறோஜினிதேவி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (46525) (25-49-12)

தகவல்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

### கந்தையா ஆறுமுகம்

[ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி]

உடுப்பிட்டி வாசிகசாலையடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் கந்தையா ஆறுமுகம் அவர்கள் (06.02.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அருந்ததிதேவி, நிர்மலாதேவி, கிருபாதேவி, லலிதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகலிங்கம், ஜெயதிலகராஜா, குமாரநாதன், பரமநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று, தகனக்கிரியைக்காக கரம்பாவளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாசிகசாலையடி, உடுப்பிட்டி. (சி-47750) (25-49-15)

தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.